பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:313

### சிவிலியன் ஒருவர் வாளால் வெட்டப்பட்டதை அடுத்து

# நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாம் மீது நேற்றிரவு பொதுமக்கள் தாக்குதல்!

## வாகனங்கள், தளபாடங்களுக்குத் தீவைப்பு! உறுப்பினர் ஒருவர் தடுத்துவைப்பு!!

யாழ்ப்பாணம்,ஒக்.6

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலரால் பொதுமகன் ஒருவர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டதால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. முகாம் மீது பெரும் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நேற்றிரவு 7.30 மணியளவில் அந்த முகாமை முற்றுகையிட்டு தாக்கினர் என்றும் -

அச்சமயம் அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கும் அங்கிருந்த தளபாடங்களுக்கும் தீ வைக்கப்பட்டதாகவும் - நேற்று நள்ளிரவு நெடுந்தீவில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மதுபோதையில் ஈ.பி.டி.பி. முகாமுக்கு முன்பாக நின்று வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஒருவரை அந்த அமைப்பைச் சேர்ந்த சிலர் துரத்திச் சென்றனர் என்றும் -

அந்த நபர் கடை ஒன்றினுள் ஓடி ஒளிந்துகொள்ள அந்தப் பகுதியில் நின்றிருந்த க.லோகநாதன் (வயது 46) என்பவர் தலையில் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடைந்தார் எனவும் -

கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த பொதுமக்களே திரண்டு சென்று ஈ.பி.டி.பி. முகாமைத் தாக்கினர் என்றும் தெரியவந்தது.

முகாமினுள் புகுந்து அடித்து நொறுக்கிய மக்கள் அங்கிருந்த மோட்டார்சைக்கிள், லாண்ட்மாஸ்டர் என்பவற்றுக்குத் தீ வைத்தனர்.

அங்கிருந்த அலுமாரி ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டபோது அதற்குள் இருந்த துப்பாக்கி ரவைகள் வெடித்துச் சிதறின.

அச்சமயம் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நால்வர் அந்த முகாமில் தங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் ஒருவரான அமீன் என அழைக்கப்படும் சிவசந்திரன் சதீஸ்குமார் என்பவர் பொதுமக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

### பொதுமக்கள் மீளக்குடியமரும் சூழலை உருவாக்க

# பலாலித் தளம், காங்கேசன்துறை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் படைகளை விலக்குக!

## யாழ்.மாவட்ட எம்.பிக்கள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்6

**பலாலி விமானப்படைத்தளம், காங்கேசன்துறை கடற்படைத் தளம் ஆகியன தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்து படையினர் முற்றாக வெளியேறி, மக்கள் மீளக்குடியமர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.**

**யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.**

**யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.**

பலாலி விமானப்படைத் தளத்தையும் காங்கேசன்துறை கடற்படைத் தளத்தையும் தற்காலிகமாகப் பயன்படுத்திக்கொண்டு யாழ்.குடாநாட்டின் ஏனைய இடங்களில் இருந்து இராணுவம், கடற்படை ஆகியன உடனடியாக வெளியேறி பொதுமக்கள் மீளக் குடியமர்வதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும்.

குடாநாட்டில் அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாத

(14ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதியின் அபிவிருத்தியில் ஆளுநருக்கு அக்கறையில்லை!

## சாடுகிறார் சிவாஜிலிங்கம் எம்.பி.




யாழ்ப்பாணம்,ஒக்.6

வடக்கின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் பின்னடித்துவரும் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனவை அப்பதவியிலிருந்து நீக்கவேண்டும்

- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட் டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு கோரினார்.



வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளில் வடக்கு - கிழக்கு ஆளுநர் என்ற வகையில் அசோக ஜயவர்த்தனவின் பங்கு பணி முக்கியமானது. மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்துக்கு சமுகமளிக்க அவர் தவறியிருப்பது அவரது அக்கறையின்மையையே காட்டுகிறது. இது தொடர்பாக எனது ஆட்சேபத்தையும் அதிருப்தியையும் தெரிவிக்க (14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையான படையினருக்கு வீடுகள்

கொழும்பு,ஒக்.6

விடுதலைப் புலிகளினால் கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்ட 7 படையினருக்கும் சிலிங்கோ குறூப் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் லலித் கொத்தலாவல வீடுகளை அன்பளிப் பாக வழங்கியுள்ளார்.

பிரதமரின் வேண்டுகோளையடுத்தே இந்த வீடுகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# பன்னிரு வேங்கைகளுக்கு தீருவிலில் நேற்று அஞ்சலி

## வானில் புகைக்கூண்டுகள் பறக்கவிடப்பட்டன

வடமராட்சி,ஒக்.6

1987ஆம் ஆண்டு வீரகாவியமான லெப்.கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 15ஆவது நினைவு தின நிகழ்வுகள் தீருவில் சதுக்கத்தில் நேற்று மாலை உணர்வுபூர்வமாக நடைபெற்றன. அங்கு அமைக்கப்பட்டிருந்த 12 வேங்கைகளின் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுமாலை 5.05 மணிக்கு இடம்பெற்றன

(14ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதம் நீடிப்பு

# வெகுஜன ஆதரவை கைதிகள் கோருகின்றனர்

கொழும்பு,ஒக்.6

களுத்துறைச் சிறைச்சாலையில் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள கைதிகளில் 13 பேர் மயக்கமடைந்தனர். மேலும் சிலர் இரத்தவாந்தி எடுத்துள்ளனர்.

உண்ணாவிரதிகள் சார்பில் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திக்குறிப்பில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எமது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் வடக்கு-கிழக்கில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்பினர், பொதுமக்கள் ஆகியோர் கூட்டாக வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று கைதிகள் அந்தச் செய்தியில் உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. எம்மை வைத்து அவர்கள் அரசியல் விளம்பரம் செய்தது போதும். அவர்களின் தயவு எமக்குத் தேவையில்லை என்றும் உண்ணாவிரதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எமது விடுதலையை அரசு துரிதப்படுத்தாவிட்டால் வடக்கு - கிழக்கு, மலையகம் ஸ்தம்பிக்கும் என்று கூறியவர்கள் எங்கே என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிறைக்கூரையில் ஏறி உண்ணா

(14ஆம் பக்கம் பார்க்க)

# யூனியன் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வுக்கு படையினர் அனுமதி மறுப்பு

## ஆட்சேபித்து சாத்வீகப் போராட்டத்துக்கு முஸ்தீபு

வலி-வடக்கு,ஒக்.6

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியர்தின விழாவையும் உதைபந்தாட்டப் போட்டிகளையும் நடத்தப் படையினர் அனுமதி மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை ஆட்சேபித்து சாத்வீக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழையமாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடத்தவிருந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு அனுமதி மறுக்கப்பட்டமை -

- கல்லூரியில் நாளை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ்.அரச அலுவலகங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மகேஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் காணப்படும் ஊழியர் வெற்றிடங்கள் யாவும் விரைவில் நிரப்பப்படவுள்ளன. இதற்கான முன்மொழிவுகள் அமைச்சரவையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழியர் வெற்றிடங்கள் மாத்திரமன்றி திணைக்களங்கள் மற்றும் அலுவலங்களில் உள்ள குறைபாடுகள், தேவைகள், பற்றாக்குறைகள் ஆகியன பற்றியும் துறைசார்ந்த ரீதியாக நீங்கள் எமக்குத் தெரியப்படுத்தினால் அவற்றைத் தீர்த்து வைக்க முடியும் என்று திணைக்களத் தலைவர்களிடம் அமைச்சர் தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமருக்கு நான் பல தடவைகள் எடுத்துக்கூறியதை அடுத்து அவர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். கடந்த 20 வருடங்களில் பணியில் இருந்து ஓய்வு பெற்றோர், இடமாற்றம் பெற்றுச் சென்றோர், பணி விலக்குச் செய்யப்பட்டோர், பணியில் இருந்து தாமாக விலகிக்கொண்டோரின் இடங்களுக்கு புதிதாக எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பிரதமர் அனுமதி வழங்கியுள்ளார்.

திணைக்களத் தலைவர்கள் தமது தேவைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி எமக்கு எடுத்துக்கூறுவதில்லை. குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் குறைகள் எதனையும் எம்மிடம் தெரிவிப்பதில்லை. அவற்றைத் தெரிவித்தால்தான் குறைகள் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியும். தென்பகுதி வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகின்றபொழுது இங்குள்ள வைத்தியசாலைகளில் தேவைகள் அதிகமாக உள்ளன. இவை யாவும் தீர்க்கப்படவேண்டும். இதன் மூலம் மாவட்டத்தை துரித அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்லமுடியும். - இவ்வாறு மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தனவும் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை. அத்துடன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, டக்ளஸ் தேவானந்தா, ந.மதனராஜா ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், ந.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டு திணைக்களத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டனர். உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தனர்.

சில திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

அடுத்த கூட்டத்துக்கு வருகை தருமாறு ஆளுநருக்கும் மாகாண அமைச்சின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்குமாறு யாழ்.மாவட்ட பதில் அரச அதிபருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

நேற்றைய கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி.இராஜநாயகம், தமிழீழ நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் உட்பட பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், செயலாளர்கள், மாநகர சபை உத்தியோகத்தர், யாழ்.செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-10-8-173)



யாழ்.செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

குழுவின் தலைவரும் அமைச்சருமான தி.மகேஸ்வரனுடன் யாழ்.பதில் அரச அதிபர் து.வைத்திலிங்கம், கிளிநொச்சி அரச அதிபர் ரி.இராஜநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் -

கூட்டத்தில் பங்குகொண்ட யாழ.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிங்கம் மற்றும் தமிழீழ நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படம்: தேவராஜன்)*

## யூனியன் கல்லூரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின நிகழ்வுக்கு அனுமதி வழங்கப்படாமை -

ஆகியன தொடர்பாக இரு சங்கங்களும் கூட்டாக விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 12 வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து செயற்பட்டுக்கொண்டிருந்த எமது பாடசாலை இக்காலகட்டங்களில் எல்லாத் துறைகளிலும் முன்னிலையில் இருந்தமை யாவரும் அறிந்ததே. தேசிய மட்டம் வரை சென்று பல சிறப்புக்களைப் பெற்றுக்கொண்டது எமது பாடசாலையாகும். விடுமுறை நாள்களிலும் பாடசாலை நாள்கள் போன்றே சகல செயற்பாடுகளும் உயிர்த்துடிப்புடன் பாடசாலை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டதே இவ்வாறு முன்னிலையில் இருப்பதற்குக் காரணமாகும்.

பாடசாலைச் சமூகம் தீர்க்கதரிசனமாக சிந்தித்து தெல்லிப்பழையில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உயர் பாதுகாப்பு வலயத்தில் யூனியன் கல்லூரியை இயங்கச் செய்வதில் பூரணமாக விருப்பங்காட்டாது இருந்தபோதிலும் அரச அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும் உறுதி மொழிகளை நம்பி பாடசாலையை நிர்வாகம் பழைய இடத்துக்கு கொண்டு செல்லவேண்டி ஏற்பட்டது. கட்டுப்பாடுகள் இன்றி சுதந்திரமாக பழைய இடத்தில் இயங்குமாயின் பாடசாலைச் சமூகமே பாடசாலையை கொண்டு செல்வதற்கு முன்னின்று உழைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இருந்தபோதிலும் கடந்த ஒரு மாத காலமாக பாடசாலையானது தெல்லிப்பழையில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கிவந்த போதிலும் பல்வேறு இடையூறுகளை அனுபவித்து வருகின்றது.

★ காங்கேசன்துறை - யாழ்ப்பாணப் பாதையூடாக 769 இலக்கம் கொண்ட ஒரேயொரு பஸ் மட்டுமே சேவையிலுள்ளது. இப்பாதையூடாக கிட்டத்தட்ட 400இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயணிப்பதற்கு பருவகாலச் சீட்டு பெற்றுள்ளனர். ஒரே பஸ்ஸில் அதிகளவிலான ஆண் - பெண் பிள்ளைகளை ஏற்றவேண்டிய சூழல் இருப்பதால் வேண்டத்தகாத சில செயற்பாடுகளுக்கு வழிவகுத்துக் கொடுத்ததாக ஆகிவிடும் என்பதையும் பெற்றோர்களாகிய நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பஸ்ஸில் இடம் இல்லாத காரணத்தால் மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து தாமதமாக செல்கின்றனர். அதேபோல் வடு திரும்பும் போதும் துர்க்கை அம்மன் கோயில்வரை நடந்து வந்தே பஸ்ஸில் ஏறிவரவேண்டியுள்ளது. இதனால் மாணவர்கள் மாலை 5 மணிக்கே வீடு திரும்பும் நிலை காணப்படுகின்றது. இதனால் பல பெற்றோர்கள் பிள்ளைகளைக் காணாது மனவேதனை அடையும் நிலை அன்றாடம் நிகழ்கின்றது. அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அவல நிலையைப் போக்க எடுத்த பல முயற்சிகளுக்கு இதுவரை காத்திரமான பலன் எதுவும் கிடைத்ததாக இல்லை.

★ பாடசாலை வளர்ச்சியில் இரு கண்களாக உள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றினது எந்தவிதமான செயற்பாடுகளையும் பாடசாலையில் மேற்கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தை கடந்த 22.09.2002 அன்று நடத்துவதற்கு எழுத்து மூலம் அனுமதி கேட்கப்பட்ட போதிலும் படையினரால் அனுமதி மறுக்கப்பட்டமையை குறிப்பிடலாம். இதன் காரணமாக பொதுக்கூட்டம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்களால் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் பொருட்டு 07.10.2002 திங்கட்கிழமை நடத்த உத்தேசித்துள்ள ஆசிரியர் தின விழாவுக்கும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் முக்கிய இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றான உதைபந்தாட்ட சிநேகபூர்வ போட்டி ஒன்று சென்.பற்றிக்ஸ் கல்லூரியுடன் கடந்த வெள்ளிக்கிழமை (04.10.2002) நடத்த ஏற்பாடாகி இருந்தது. இதனையும் கல்லூரி மைதானத்தில் நடத்துவதற்கு படையினரால் அனுமதி மறுக்கப்பட்டதால் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் மேற்படி உதைபந்தாட்டத்தை நடத்தவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் அவசியம் செய்து முடிக்கவேண்டிய வேலைகள் பல இருப்பதால் தொழிலாளர்கள் விடுமுறை நாள்களில் பாடசாலை செல்லவேண்டிய தேவை கட்டாயமானதாகும். இதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பதையறிந்து பெற்றோராகிய நாம் வேதனை அடைகிறோம்.

★ பாடசாலையில் தொளாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றபோதிலும் அடிப்படைத் தேவைகளாகிய குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி என்பவையும் இல்லாதிருப்பதைக் காண்கின்றோம். பல உதவி வழங்கும் நிறுவனங்கள் பாடசாலையை நாளாந்தம் பார்வையிட்டு வாக்குறுதிகள் பல வழங்கியபோதிலும் இதுவரையும் எந்தவோர் ஆக்கபூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறிகின்றோம்.

★ ஆய்வுகூடம், கணனிகள் என்பன உரியமுறையில் செயற்படுவதற்கு தேவையான மின்சார வசதி இல்லாதிருப்பது உயர்தர மாணவர்களைக் கொண்ட பாடசாலையின் செயற்பாட்டிற்கு பெரிதும் தடையாக

(13ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தின விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.6

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழா இன்று பாடசாலைகேட்போர் கூடத்தில் க.மகேந்திரரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்ட கல்விப் பணிப்பாளர் ஆதரபரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமறைக் கலாமன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் ஆசியுரை நிகழ்த்தவுள்ளார்.

★ ★ ★

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் ஆசிரியர் தின விழா இன்று பிற்பகல் 3மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-4)

★ ★ ★

கந்தரோடை தமிழக்கந்தையா வித்தியாசாலையின் ஆசிரியர் தின விழா நாளை காலை பாடசாலையில் கொண்டாடப்படவுள்ளது.

பெற்றோர், மாணவர்களால் கொண்டாடப்படவுள்ள இவ்விழாவில் ஆசிரியர்கள் கந்தரோடை அருளானந்த பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-152)

★ ★ ★

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா நாளை காலை 10.30மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

★ ★ ★

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் ஆசிரியர் தின விழாவும் பரிசளிப்பும் இன்று பிற்பகல் 2மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.பிராந்திய ரெலிக்கொம் நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் என். அன்ரனிராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ)

★ ★ ★

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் ஏற்பாட்டிலான ஆசிரியர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெறும் என்று 4ஆம் பக்கத்தில் வெளியான தகவல் தவறானதாகும். (ஐ-3)

## நகர மத்தியில் காவலரண் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்நகரில் பஸ் நிலையத்துக்கு முன்பாக - ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண் நேற்று அகற்றப்பட்டது.

இந்தக் காவலரண் அப்பகுதியில் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக அமைந்திருந்தது. அதனை அகற்றி சீரான போக்குவரத்துக்கு உதவவேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தமை தெரிந்ததே. (ஐ-8-139)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ் மாவட்டத்தில் உள்ள உயர் கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்களின் (கணனி பயிற்சி நிலையங்கள்) இயக்குநர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சகல கண்னிப் பயிற்சி நிலையங்களின் இயக்குநர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.(ஐ-3)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.6

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் கலந்துகொள்வார். (ஐ-3)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக்.6

நவராத்திரி விழாவை முன்னிட்டு உடுப்பிட்டி கொமந்துறை ஸ்ரீ மனோன்மணி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமைமுதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை தினமும் இரவு 7மணிமுதல் 8மணிவரை "தேவி மகாத்மியம்" எனும் தலைப்பில் கவிமாமணி காரை எம்.பி.அருளானந்தன் உரை நிகழ்த்தவுள்ளார். (ஒ-4)

☆ ☆ ☆

சாவகச்சேரி,ஒக்.6

கொடிகாமம் அல்லாரை புனித செபமாலை ஆலய நற்கருணை விழாத் திருப்பலிப் பூசை இன்று பி.ப. 5 மணிக்கு இடம்பெறும். திருவிழாவும் திருப்பலிப் பூசையும் நாளை திங்கட்கிழமை காலை 7.30மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது என பங்குத்தந்தை அருள்நேசன் தெரிவித்துள்ளார். (ஒ-31)

☆ ☆ ☆

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறும்.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் கூட்டுத்திருப்பலியை காலை 7மணிக்கு ஒப்புக்கொடுப்பார். மாலை 5மணிக்கு தேர்ப்பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறவிருக்கின்றன. (3-ரி)



### ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகரம்:

# அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து காஸாவில் பலஸ்தீனர் ஆர்ப்பாட்டம்!

ஜெருசலேம்,ஒக்.6

சர்ச்சைக்குரிய இடமான ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகர் என்று கூறும் பிரேரணையை அமெரிக்க செனட் அங்கீகரித்ததையும் அதில் புஷ் கையெழுத்திட்டதையும் கண்டித்து காஸா நகரத்தில் பலஸ்தீனர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்க செனட்டின் முடிவை அடுத்து தற்போது டெல் அவிவில் இருக்கும் அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த பலஸ்தீனர்கள் காஸா நகரத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அரபாத்தின் படங்களைத் தாங்கியவாறு அமெரிக்காவுக்கு எதிராக கோஷம் எழுப்பும் பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்கள்.

இஸ்ரேலுக்கு எதிராகப் போரிட பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் பாத்தா அமைப்பு மற்றும் ஹமாஸ் அமைப்பு ஆகியன உட்பட அனைத்து பலஸ்தீனக் குழுக்களையும் ஒன்றிணையுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அழைப்புவிடுத்தனர்.

ஜெருசலேம் தமக்குரியது என்று இஸ்ரேலும் பலஸ்தீனமும் உரிமை கோரி வருகின்றன. இதனால் அது எப்போதும் ஓர் உயர் சர்ச்சைக்குரிய இடமாகவே விளங்கிவருகிறது. இந்த நிலையில், ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகர் என்று கூறும் பிரேரணை யில் கடந்த திங்களன்று அதிபர் புஷ் கையெழுத்திட்டார். இதுவே பலஸ்தீனர்களைப் பெரும் ஆத்திரம்கொள்ள வைத்துள்ளது.

"அமெரிக்காவின் இந்த முடிவை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரபுக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கிவரும் ஆதரவை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்" - என்றார் பலஸ்தீன நாடாளுமன்ற உறுப்பினர் இப்ராஹிம் அபு அல்-நஜா.

ஆனால், ஜெருசலேம் தொடர்பான தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். (ம)

# பிரான்டன்பெர்க் வாயில் திறப்பு!



பனிப்போர் காலத்தில் ஜேர்மனி கிழக்கு மற்றும் மேற்காகப் பிரிந்திருந்தது. அப்போது இரு நாடுகளையும் பிரித்து புகழ்பெற்ற பேர்லின் சுவர் அமைக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் இரு நாடுகளுக்குமான நுழை வாயிலாக பிரான்டன்பெர்க் அமைந்திருந்தது.

இரு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைந்த பின்னர் பேர்லின் சுவர் இடிக்கப்பட்டது. ஆனால், இந்த நுழை வாயில் மட்டும் எஞ்சியிருந்தது. 213 ஆண்டு பழைமைவாய்ந்த இந்த நுழை வாயில் தற்போது திறந்துவைக்கப் பட்டுள்ளது. இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றானதன் 12ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. அன்று இந்த வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த நுழைவாயில் திறக்கப்பட்டது.

நுழைவாயிலை மறைத்திருந்த பிரம்மாண்டமான திரைச்சீலையை பிரபல பட அதிபரும் பஷன் டிசைனருமான வில்லி போக்னர் ராட்சத பலூனில் பறந்து வந்து திறந்து வைத்தார். திரைச் சீலையில் கீழ்ப் பகுதியில் இருந்த விசையைத் தட்டியதும் அது விலகி நுழைவாயில் ஒளி வெள்ளத்தில் மிதந்தது.

இந்த நிகழ்வில் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரன், ஐரோப்பாவின் முக்கிய நகர மேயர்கள், பரமுகர்கள் உட்பட சுமார் 10 லட்சம் பேர் கலந்துகொண்டனர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம)

# நேபாள அமைச்சரவை அரசரால் பதவிநீக்கம்

காத்மண்டு,ஒக்.6

நேபாள பிரதமரையும் அமைச்சரவையையும் அரசர் ஞானேந்திரா பதவி நீக்கியுள்ளார். நாட்டின் முழு அதிகாரத்தையும் தற்காலிகமாக அவர் பொறுப்பேற்றுள்ளார்.

அடுத்த மாதம் 13ஆம் திகதி பொதுத் தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆட்சிக்கலைப்பு இடம்பெற்றுள்ளது.

அமைச்சரவையைக் கலைத்த பின்னர் நாட்டுமக்களுக்கு தொலைகாட்சியில் உரையாற்றிய அரசர் ஞானேந்திரா, நவம்பர் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு பிரதமர் டியூபா தவறிவிட்டார் என்று தெரிவித்தார்.

முன்னதாக நாட்டில், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் தேர்தலை ஒரு வருட காலத்துக்கு ஒத்திவைக்குமாறு பிரதமர் ஷேக் பகதூர் டியூபா வியாழக்கிழமை அரசரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனை நிராகரித்த அரசர், அவரையும் அவரது அமைச்சரவையையும் பதவிநீக்கினார். அரசரின் இந்த முடிவு அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது என்று தெரிவித்தார்.


அதிர்ச்சியூட்டும் இந்த முடிவு குறித்து நேபாள அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி தீவிரமாக ஆராய்ந்தன. (ம)



இந்தியாவின் காஷ்மீர் மானிலத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடந்து முடிந்த தேர்தலின்போது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட தீவிரவாத இயக்கங்களின் முக்கிய தலைவர்கள் ஏழுபேரை தாம் கைது செய்துள்ளதாக இந்திய இராணுவம் கூறுகின்றது. கைது செய்யப்பட்டவர்களில் இருவரை ஊடகவியலாளர்களுக்கு காண்பித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# ஆயுத சோதனையின்போது நாடகமாடினால் கூட்டணி அமைத்து ஈராக்கை தாக்குவோம்!

## சதாமுக்கு புஷ் கடும் எச்சரிக்கை





வாஷிங்ரன்,ஒக்.6

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களின் சோதனையின்போது சதாம் ஹுசைன் நாடகமாடினால் கூட்டணி அமைத்து ஈராக்கை தாக்குவோம் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

- இவ்வாறு அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.சதாம் கடந்த 11 வருடங்களாக தனது நாட்டு மக்களிடையேயும், பக்கத்து நாட்டு மக்களிடையேயும் பெரும் வெறுப்பைச் சம்பாதித்துவிட்டார். அவரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு ஐ.நா.சபையில் எத்தனையோ தீர்மானங்கள் போட்டாகிவிட்டது. ஆனால், எதுவும் பயன் அளிக்கவில்லை.

இப்போது சதாம் ஹுசைன் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் தனது நாட்டின் போர்த்தளபாடங்களைப் பார்வையிட அனுமதிப்பதாகக் கூறியுள்ளார். அவர் தனது வார்த்தையைக் காப்பாற்றவேண்டும். மீறி ஏதாவது நாடகமாடினால் அமெரிக்கா தனக்கே உரிய பாணியில் பெரிய கூட்டணி ஒன்றை உருவாக்கி உலகின் மோசமான ஆயுதங்களை உலகின் மோசமான ஒரு மனிதரிடமிருந்து பிடுங்கி வெளியே தூக்கி எறியும்.

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை என்பது எமது முதல்நோக்கம் அல்ல. அது எமது கடைசி வாய்ப்புத்தான். இதை சதாம் ஹுசைன் புரிந்துகொள்ளவேண்டும். அமெரிக்க மக்களின் விருப்பம், வலிமை என்ன என்பதை ஐக்கிய நாடுகள் சபையும் அறியும்.

என்னுடைய எண்ணம் ஐ.நா. தனது கடமையைச் செய்யவேண்டும். அப்போதுதான் உலகில் அமைதியை நிலைநாட்டமுடியும். ஐ.நா., ஈராக்மீது போர்தொடுக்க அனுமதி அளிக்காவிட்டாலும்கூட அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி எங்களால் போர் தொடுக்க இயலும். அமெரிக்கா எந்தச் சவாலையும் சந்திக்கத் தயாராகவுள்ளது - என்றார். (ம)

# அமெரிக்க தலிபானுக்கு 20வருட சிறைத்தண்டனை

வாஷிங்ரன்,ஒக்.6

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் இணைந்து அமெரிக்கர்களுக்கு எதிராகப் போராடிய அமெரிக்கரான ஜோன் வோக்கர் லின்த்துக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. "தலிபான்களுடன் இணைந்து செயற்படுவது என்ற உமது தெரிவு மிக மோசமானது" - என்று வோக்கர் லினத்துக்கு மாவட்ட நீதிபதியான ரி.எஸ்.இல்ஸ் தெரிவித்தார்.

முன்னதாகத் தான் தலிபான்களுடன் இணைந்து செயற்பட்டதை ஜோன் வோக்கர் நீதிபதி முன்னிலையில் ஏற்றுக்கொண்டார். தீவிரவாதம் நியாயமானது என்று தான் நம்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் அளித்த 20 நிமிட நேர வாக்குமூலத்தில், தலிபான் அமைப்பு ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டாவுடன் இணைந்து செயற்படுவது தனக்கு தெரிந்திருந்தால் தான் தலிபான்களுடன் இணைந்து செயற்பட்டிருக்கமாட்டேன் என்றும் கூறியிருந்தார்.

21 வயதான ஜோன் வோக்கர் தலிபான்களுடன் இணைந்து செயற்பட்டமைக்காக அமெரிக்கப்படையினரால் ஆப்கானிஸ்தானில் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டார். (ம)



ஜோன் வோக்கர் லின்த்

# ஐவரிகோஸ்டில் தொடர்ந்த சண்டை முடிவுக்கு வந்தது

ஐவரிகோஸ்டில் கடந்த 17 நாள்களாக அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்று வந்த சண்டை மேற்கு ஆபிரிக்க நாட்டு சமாதான ஏற்பாட்டாளர்களின் உதவியுடன் முடிவுக்கு வந்தது.

சமாதான உடன்படிக்கை ஒன்றிலும் இரு தரப்பினரும் விரைவில் கையெழுத்திடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 19ஆம் திகதி ஐவரிகோஸ்ட் அரசை பதவிகவிழ்க்கும் முயற்சி ஒன்றுடன் அரசப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான இந்தச் சண்டை ஆரம்பமானது. இந்தச் சண்டையில் நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர். அதனை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் முழு முயற்சி எடுத்துக் கொண்டனர்.

புதிய இணக்கப்பாட்டின்படி கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்கள் அனைத்தையும் ஒப்படைப்பார்கள். கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளும் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ்வரும்.



ஐவரிகோஸ்டின் வடபகுதியில் நிலைகொண்டுள்ள பிரான்ஸ் படையினரின் டாங்கிகளுக்கு முன்பாக சிறுமி ஒருத்தி.

அதற்குப் பதிலாக அனைத்து அரசியல் கட்சிகளும் பங்குகொள்ளக்கூடிய புதிய தேர்தல் ஒன்றை அதிபர் விரைவில் நடத்தவேண்டும் என்று கிளர்ச்சியாளர்கள் கேட்டுள்ளனர்.

## பேச்சுக்கள் ஆரம்பம்

றொறிட்டி,ஒக்.6

சூடானின் தென் பகுதியில் தனி நாடு கோரி போராடிவரும் மக்கள் விடுதலை இராணுவத்துக்கும் அரசுக்கும் இடையே மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

19 வருடகாலமாகத் தொடரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கென்யாவின் தென்பகுதி நகரான றொறிட்டியில் இந்தப் பேச்சுக்கள் நடக்கும். இதில் கென்யா ஏற்பாட்டாளராகப் பணியாற்றும்.

# அமெ. தாக்குதலுக்கு எதிராக ஈராக் இராஜீய நடவடிக்கை!

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எதனையாவது மேற்கொள்ள முயன்றால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க தன் பக்கத்துக்கு ஆள்சேர்க்கும் இராஜீய முயற்சியில் ஈராக் ஈடுபட்டுள்ளது.

இதற்காக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நாஜி சப்ரி வளைகுடா நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அமெரிக்கா ஈராக் மீது தாக்குதல் நடத்தினால் அது மத்தியகிழக்கு நாடுகளின் இறைமையைப் பாதிக்கும் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

அதேவேளை -

ஈராக்குக்கு எதிரான இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுக்கும் புதிய பிரேரணை ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றுவதற்கான தனது முயற்சியை அமெரிக்காவும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும்
**பெண்களுக்கான அலங்காரம்**

தென்பகுதியில் இருந்து வருகை தந்த அழகுக் கலை நிபுணரால் தலை அலங்காரம், முக ஒப்பனை, ஆடை அலங்காரம் உட்பட அனைத்து அலங்காரங்களுக்கும் ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்யவும். நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**BABU Communication**
**Campus Lane, Thirunelvely. 021-222 2423.**
(9022)

## பாராட்டுகின்றோம்



காரைநகர் வாரிவளவைப்
பிறப்பிடமாகக் கொண்ட
உயர்திரு.
**வேலுப்பிள்ளை இந்திரன்**

அவர்கள் சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட பதில் நீதிவான் திரு. மு. சிற்றம்பலம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் ஆரம்பப் படிப்பை வியாவில் சைவ வித்தியாசாலையிலும், பின்னர் மேற்படிப்பை யாழ்ற்றன் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயத்திலும் கற்றார். இவர் பல சங்கங்களின் தலைவராகவும், செயலாளராகவும், உறுப்பினராகவும் விளங்குவதோடு ஒரு சமூகத் தொண்டனாகவும், தொழிற்சங்கவாதியாகவும் இருந்து இடம்பெயர்ந்துவந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரும்பாடுபட்டார். அத்துடன், இவர் முன்னைய வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் தற்போது வ/இராசேந்திரம்குளம் அ. த. க. பாடசாலையில் அதிபராக உள்ளார். (இவர் ஆசிரியராக, கொத்தணி செயலாளராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராகப் பதவி உயர்வு பெற்றார்.) இவரது அளப்பரிய சேவையைப் பாராட்டி 'சமாதான நீதிவான்' பட்டம் வழங்கப்பட்டதை மனமகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

(8999) **தீவக நண்பர்கள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 07 - 1953
உதிர்வு 16 - 10 - 2001

**அமரர் நாகன் பாலசுந்தரம்**

திதி:06.10.2002

அன்புப் பரிவுடனே அகமகிழ்ந்து எம்முடனே
இன்ப வாழ்வோடு இப்புவியில் இருக்கையிலே
என்ன இடர் நேர்ந்து எம்மையெல்லாம் துயரில்விட்டு
சென்ற இடம்ஏது எடுத்தியம்ப மாட்டாயோ?
"ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு - என்னும்
அப்பா என்றழைக்க யாருமில்லையே"!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்.**

*பெரிய நாவலடி,*
*கொடிகாமம்.* (8908)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 - 02 - 1942
ஆண்டவன் அடியில் 06 - 10 - 2001

**திருமதி மார்க்கண்டு இராசாத்தி**

திதி:06.10.2002

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த அம்மாவே!
அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்த
ஆசை முகத்தை எம்மால் மறக்க முடியுமா?
எப்போது உங்கள் முகம் காண்போம்? இனி
எப்போது உங்கள் குரலைக் கேட்போம்?
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் நிழலாடுகின்றன!
ஓராண்டு சென்றாலும் ஆறாது எம்துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*"சந்திரா வாசம்"*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (9061)

## வெயிலில் வாடும் நோயாளர்கள்

சங்கானை,ஒக்.6

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு வருபவர்கள் வெயிலில் வாட வேண்டியுள்ளது. வெளிநோயாளர் விரைவில் சிகிச்சைக்காக மருத்துவரிடம் காட்டுவதற்குச் செல்வதற்காக வைத்தியசாலையின் முன்பகுதியில் காத்துநிற்போரே இக்கஷ்டத்திற்குள்ளாகின்றனர். போதிய மறைப்பு வசதிகள் செய்யப்படாமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் கூட காய்ச்சலுக்குக்காக சிகிச்சை பெறச் சென்ற இளம் யுவதி ஒருவர் வெயிலில் அதிக நேரம் நிற்கநேர்ந்தால் மயக்கமடைய வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-29)

## 12 வருடங்களின் பின்னர் பாதை திறப்பு

பக்கி எல்லை - அம்பாறை வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்காக மீண்டும் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வீதி கடந்த 12 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது.

சுகாதார போஷாக்கு நலன்புரி அமைச்சர் பி.தயாரத்னவுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவடிமும்மாரி கோட்ட அரசியல் பொறுப்பாளர் சச்சி மாஸ்ரருக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இவ்வீதி திறக்கப்படுகிறது. (ஒ)

## வர்த்தகவங்கி சனிக்கிழமையும் செயற்படும்

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ்.கிளை நேற்றுமுதல் சனிக்கிழமைகளிலும் தனது வழமையான சேவைகளை வழங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி மேற்படி கிளையில் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை வழமையான வங்கிநடவடிக்கைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## கௌரவிப்பு நிகழ்வு

ஆசிரியர் தினத்தையொட்டி, யாழ். மாவட்டத்திலுள்ள சகல அதிபர்கள், ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கோப்பாய்க் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் சகல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-4)

## மருதங்கேணியில் பல்லப்பை வீதி மீண்டும் மூடப்பட்டது

புலோலி மருதங்கேணி வீதியில் அமைந்துள்ள பல்லப்பை இராணுவ முகாம் ஊடாகச் செல்லும் வீதி மீண்டும் பொதுமக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் மேற்படி வீதியைக் கடந்த 5 வருடங்களாக மக்கள் பாவனைக்கு அனுமதியாது மூடியிருந்தனர்.

பின்னர் அண்மையில் நடைபெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வீதி உற்சவ காலத்தில் மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டது.

தற்போது உற்சவம் முடிவுற்றதை அடுத்து இப்பகுதியினூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டு, மீண்டும் வீதி மூடப்பட்டுள்ளது. (எ-15)

## முதலாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



தோற்றம் 14 - 10 - 1948
மறைவு 16 - 10 - 2001

**அமரர் கொத்தன் சங்கரன்**

விதியின் வழியிலே நீங்கள்
விண்ணகம் சென்றாலும் - எம்
நெஞ்சங்களில் நினைவுகளாய்
என்றென்றும் வாழ்வீர்கள்!

இன்று (06.10.2002) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அமரரின் அஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வன்னியசிங்கம் வீதி,*
*கைதடி வடக்கு.* (9070)

- பாசமுடன்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 23 - 06 - 1924
மறைவு 06 - 09 - 2002

**அமரர் பசுபதி குழந்தைவேலு**

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.10.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*உதயசூரியன் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*

நிரந்தர முகவரி:
*அறுகுவெளி,*
*தனங்களப்பு.*

- ஆறுமுகராசா
குடும்பத்தினர் *(சோதி).*
(8956)

## நெஞ்சைவிட்டகலாத இரண்டாம் வருட நினைவலைகள்



அன்னை மடியில் 05 - 09 - 1987
ஆண்டவன் அடியில் 06 - 10 - 2000

செல்வன்
**இராசையா ஜீவகரன்**

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டகலாது. எங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆண்டவனின் நிழலில் உங்களுக்கு ஆறுதல் கிடைத்திருக்க எங்களுக்கு உங்கள் நினைவு ஆறாத்துயரினைத் தருகின்றது.

தாங்கள் துயரில் மூழ்கும்:
குடும்பத்தினர்.

*உடுப்பிட்டி.* (8977)

**செய்மதி அன்ரனா சிஸ்டம்!**



எமது Sats-Tech-India நிறுவனத்தின் யாழ்.பிரிவான Sats-Tech Engineer's இன் 2ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கையில் எங்கும் கிடைக்காத விலையில் 8' மற்றும் 10' அனலொக்/டிஜிரல் செய்மதி அன்ரனா சிஸ்டம் விற்பனையில் .....!

Rs. 25,000/-
Rs. 30,000/-
Rs. 15,000/-
Rs. 45,000/-

☞ யாழ்/வன்னி மாவட்டங்கள் உட்பட இணைப்புக் கட்டணம் இலவசம்.

*மேலதிக விவரங்களுக்கு:*

**SATS-TECH ENGINEER'S**
M/s National Video Centre,
182, K.K.S. Road, Kokuvil (Jaffna). Phone: 077 710785
(8979)

# உதயன்

## பேரினவாதிகளின் பகைமையுணர்வு இப்போது நீறுபூத்த நெருப்பு

திருகோணமலை நகரம் நேற்றுமுன்தினம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட ஆறு இராணுவச் சிப்பாய்களை விடுவிக்கக்கோரி பெரும்பான்மை இனத்தவர் நடத்திய எதிர்ப்புப் போராட்டமே இந்த நிலைமைக்குக் காரணம்.

கைதுசெய்யப்பட்டு, புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் தமது இனத்துச் சிப்பாய்களை விடுவிக்கக்கோரி பெரும்பான்மை இனத்தவர்கள் அஹிம்சை வழியில் - சாத்வீக முறையில் - தமது எதிர்ப்பு நிகழ்வை நடத்திக் காட்டுவதை யாரும் தப்பு என்று கூறமுடியாது. தங்களது மனவுணர்வை அமைதி முறையில் வெளிப்படுத்தும் அடிப்படை உரிமை அவர்களுக்கு உள்ளது. அதை எவரும் மறுக்கமுடியாது.

ஆனால், அந்த மன உணர்வை வன்முறை வழியில் - அச்சுறுத்தல் பாணியில் - அவர்கள் வெளிப்படுத்த முயன்றிருப்பதே, கவலைக்குரிய விடயமாகியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் திருகோணமலை நகரில் வீதிகளில் ரயர்கள், மரக்குற்றிகள் போட்டு எரிக்கப்பட்டன. பிரயாணிகள், பாதசாரிகள் அச்சுறுத்தப்பட்டனர். மிரட்டல் மற்றும் அச்சம் காரணமாகத் தமிழர், முஸ்லிம்களின் கடைகள் பூட்டப்பட்டன. வாள், கத்தி கொண்டு வீதிகளில் நடமாடினோர் மக்களை அச்சுறுத்தி, அதன்மூலம் ஹர்த்தாலை அனுஷ்டிக்கச் செய்ய முயன்றுள்ளனர்.

தமிழர் பகுதிகளுக்குள் எரிக்கப்பட்ட ரயர்களைப் போட்டு, போக்குவரத்துத் தடுக்கப்பட்டிருக்கின்றது. அதை அப்புறப்படுத்த முயன்ற தமிழ் இளைஞர்கள் வாள்கள், கத்திகள் கொண்டு பயமுறுத்தித் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழரின் தாயகத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் திருகோணமலை, பேரினவாத அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழரிடமிருந்து அபகரிக்கப்பட்டுவரும் தமிழர் தாயகத் தலைநகர் அது.

அங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள், பல சங்கதிகளை எமக்குச் சொல்லாமல் சொல்லுகின்றன.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் திருகோணமலைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிப் போராளிகள் இருவர், இன்னும் விடுவிக்கப்படவில்லை.

அரசுக் கட்டுப்பாட்டுப் பிரசேத்துக்குள் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்று கூறி அரசு அவர்களைத் தடுத்து வைத்திருக்கின்றது.

அதேபோன்று, தமது பிரதேசத்துக்குள் ஆயுதங்களுடன் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஏழு இராணுவத்தினரில் ஆறு பேரையே புலிகள் தடுத்து வைத்திருக்கின்றனர்.

இரண்டு புலிகளையும் விடுவித்தால் ஆறு இராணுவத்தினரையும் விடுவிக்கலாம் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படும் நியாயம் அரசுக்கு இன்னும் உறைக்கவில்லை.

புலிகளுக்கு எதிராக உண்ணாவிரதம், ஹர்த்தால் நடத்தி, தமிழ்மக்களை அச்சுறுத்தும - பயனற்ற - செயலைப் புரிகின்ற திருகோணமலை வாழ் பேரினவாதிகள், அதைவிடுத்து, புலிகள் கூறுவதில் உள்ள நியாயத்தை அரசுக்கு உறைக்கச் செய்யும் வகையில் தமது போராட்டத்தைத் திசைதிருப்பவேண்டும். அப்படிச் செய்தால் புலிகளின் காவலில் இருக்கும் ஆறு பேரையும் விடுவிப்பது இலகுவாகும்; சாத்தியமாகும்.

அதைச் செய்யாமல் - அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாக - இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஈழத்தமிழரின் உறுதியான தலைநகரான திருகோணமலையில், தமிழரின் இருப்பை அச்சுறுத்தி பலமிழக்கச் செய்யும் முயற்சியில் அவர்கள் இறங்கக்கூடாது.

அப்படிச் செய்ய முயல்வது, சுவரில் எறிந்த பந்து திரும்பி வருவதுபோல தமது பக்கமே மீண்டுவரும்; அதன் ஆபத்து தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும் என்பதை அவர்கள் உணராமல் இருப்பது வேடிக்கையே.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை, பேரினவாதிகள் மத்தியில் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தியிருப்பதாக நம்பியிருந்தவர்களின் மனதில், திருகோணமலை நிகழ்வுகள் சிறு கீறலை ஏற்படுத்தியிருப்பதையும் நாம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழரின் உரிமையான கோரிக்கையை பேரினவாதிகள் இனப் பகைமை உணர்வுடன் நோக்கிய காலம் மலையேறிவிட்டது எனக்கருதியவர்களுக்கு, 'இல்லை, அது நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது' என்பதை திருகோணமலை நிலைமை தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றது என்பது உண்மை.

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியர் எவருமில்லை

### நோயாளர்களுக்கு பல கஷ்டங்கள்

ஊர்காவற்றுறை,ஒக்.6

ஊர்காவற்றுறை வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக இருந்தும் கடந்த பல வருடங்களாக நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்படாததனால் நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொண்டார்.

அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

இப்பிரதேசத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் வெளியிடங்களில் சேவையாற்றினால் அவர்களின் பெயர், விவரங்களை அறியத்தாருங்கள். அவர்களுக்கு இங்கு சேவையாற்றக்கூடியதாக இடமாற்றம் பெற்றுத்தரலாம். எதிர்வரும் ஜனவரி மாதத்தின் பின்பு வைத்திய அதிகாரி வெற்றிடங்களை நிரப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இங்குள்ளவர்கள் கடமையாற்ற முன்வராத பட்சத்தில் இந்தியாவில் இருந்து வைத்தியர்களைப் பெற சாத்தியமும் உள்ளது - என்றார். (ம-16)

### மிதிபலகைப் பயணம் தொடர்பாக

# பஸ் ஊழியர் - மாணவர் இடையே அடிக்கடி தோன்றும் முறுகல்நிலை!

## விரைவில் தீர்வுகாண பொதுமக்கள் அழுத்தம்

வலி.வடக்கு, ஒக்.6

பாடசாலை மாணவர்களுக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கும் இடையே அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவது குறித்து பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தவிர்க்கமுடியாத பல காரணங்களால் மாணவர்களுக்கான பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடத்தப்பட்டுவருகின்றன. ஆனால், பஸ்கள் மூலம் பாடசாலைக்குச் செல்லும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் அவர்கள் பஸ்களின் மிதிபலகைகளில் நின்று பயணிக்க வேண்டியது தவிர்க்கப்பட முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் மாணவர்களுக்கும், பஸ் நடத்துநர் மற்றும் சாரதிகளுக்கும் இடையே முறுகல்நிலை தோன்றும் சந்தர்ப்பங்களும் உருவானகின்றன.

அண்மையில் பருத்தித்துறை பணிமனைக்குச் சொந்தமான பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்போது மிதிபலகைப் பயணம் தொடர்பாக மாணவருக்கும் சாரதிக்கும் இடையே ஏற்பட்ட முறுகல்நிலை காரணமாக நல்லூர் குறுக்கு வீதிக்கு அண்மையில் பஸ் நிறுத்தப்பட்டு சிறிது நேர தாமதத்தின் பின்னர் பஸ் மீண்டும் புறப்பட்டுச்செல்ல நேரிட்டது.

கடந்தவாரம் தெல்லிப்பழைப் பகுதிப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் சாரதி, நடத்துநர் ஆகியோரால் பஸ்ஸில் இருந்து தெல்லிப்பழைச் சந்தி, மல்லாகம் சந்தி ஆகிய இடங்களில் வற்புறுத்தி இறக்கிவிடப்பட்ட சம்பவமும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

பஸ்ஸினுள் இடமில்லாத நிலையில், குறித்த நேரத்துக்குள் பாடசாலைக்குச்செல்ல வேண்டிய கட்டாயம் காரணமாகவே - தாம் மிதிபலகையில் நின்றாவது பயணிக்க வேண்டியிருப்பதாக மாணவர் தரப்பில் கூறப்படுகிறது.

இதேசமயம், மாணவர், பல சந்தப்பங்களில் பஸ்ஸினுள் போதிய இடமிருந்தாலும் வேண்டுமென்றே மிதிபலகைப் பயணம் மேற்கொள்வதாகவும் -

இதனால், பிறபயணிகளுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாலும், பஸ்ஸைச் செலுத்துவதில் சாரதி சிரமத்தை எதிர்நோக்க நேரிடுவதாலும் மாணவர்களை கண்டிப்பதாகவும் - அச்சந்தர்ப்பத்திலேயே முறுகல் நிலை உருவாகுவதாகவும் பஸ் நடத்துநர், சாரதிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நிலை விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்க முன்னர் பாடசாலை அதிபர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒன்றிணைந்து இதற்குத் தீர்வுகாணவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-86)

# பெண்கள் எழுச்சி நாளையொட்டி கிளிநொச்சியில் சிறப்பு நிகழ்வுகள்

## கோப்பாயில் நினைவுச் சின்னம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.6

தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் எதிர்வரும் 10ஆம் திகதி வன்னிப் பெருநிலப்பரப்பில் பாரிய அளவில் கொண்டாடப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் லெப். மாலதியின் நினைவு தினமான ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளாக ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த எழுச்சி நாளையொட்டி இந்த ஆண்டு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் 10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. இதில் புலிகளின் மகளிர் படையணிகளின் இராணுவ அணிவகுப்பு இடம்பெறவுள்ளது.

அத்துடன், இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை புலிகளின் மகளிர் படையணியினர் வெற்றிகரமாக முறியடித்த தாக்குதலின் மாதிரிச் சமரும் அங்கு நடத்திக் காட்டப்படவுள்ளது.

பெண் போராளிகளின் கலைநிகழ்வுகளுடன் 'வெஞ்சமரின் வரிகள்' எனும் பாடல் ஒலிப்பேழை வெளியீடும் இடம்பெறவுள்ளது. இந்த எழுச்சிநாள் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை -

1987ஆம் ஆண்டு கோப்பாய் செல்வபுரம் பகுதியில் லெப். மாலதி வீரச்சாவடைந்த இடத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு நினைவுச் சின்னம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது. (ஒ-10)

### நாளை

புரட்டாதி 21
திங்கட்கிழமை
(07.10.2002)
திதி : பிரதமை
பிற்பகல் 3.21வரை.
நட்சத்திரம்: சித்திரை
முன்னிரவு 11.46வரை.
நவராத்திரி விரதாரம்பம்
சுபநேரம் : 12.02 - 1.32
ராகுகாலம்: 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு சங்கிலியின் பலம், அச்சங்கிலியிலுள்ள வளையங்களில் வலுக்குறைந்த வளையத்திலேயே தங்கியுள்ளது.

# காணாமற்போனோர் குறித்த இறப்பு சான்றிதழ் பெறச்சிக்கல்!

## சட்டம் காலாவதியானதால்

யாழ்ப்பாணம்,செப்.6

நாட்டில் கடந்தகாலத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதி மரண அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் நடைமுறை தற்பொழுது நீக்கப்பட்டுள்ளமையால் சம்பந்தப்பட்வர்கள் அதனைப் பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துக்கேட்டபோது -

1995ஆம் ஆண்டு இவ்வாறு மரண அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் இடைக்காலச் சட்டம் முதன்முதலாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் -

பின் அது ஒவ்வோர் ஆண்டும் நீடிக்கப்பட்டு வந்தபோதும் கடந்த 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் அது நீடிக்கப்படவில்லை என்றும் -

பதிவாளர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு பதிவாளர் நாயகத்தினால் அமைச்சரவைக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் இன்னும் அது தொடர்பான அறிவித்தல் ஏதும் கிடைக்கவில்லை என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதன்காரணமாக காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-10-182)

## களவுபோன தொலைபேசி மறுநாள் மீட்பு

தென்மராட்சி,ஒக்.6

கொழும்பு வர்த்தகர் ஒருவர் பளை நகர்ப் பகுதியில் பறிகொடுத்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி பளை காவல்துறையினரால் மறுநாளே மீட்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

வர்த்தக நிலையமொன்றில் தொலைபேசியை வைத்துவிட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டபோது அங்கு வைக்கப்பட்ட தொலைபேசி மாயமாக மறைந்தது பற்றி பளை காவல்துறையினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

காவல்துறையினர் துரிதகதியில் நடவடிக்கை எடுத்ததன் பேரில் மறுநாள் தொலைபேசி மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பளை காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ-117)

# வல்லிபுர ஆலய உற்சவங்கள் 'ஐ' அலைவரிசையில் இன்று


யாழ்ப்பாணம்,ஒக்.6

பருத்தித்துறை துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த ரதோற்சவம் மற்றும் கடல் தீர்த்த உற்வசம் ஆகியவற்றின் தொகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பப்படவுள்ளதாக ரூபவாஹினி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பு நிகழ்ச்சியை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இரா.ரவீந்திரன் வடிவமைத்துள்ளார். (ஒ)

# அரும்பொருள்களை சட்
# பாதுகாப்பது சாத்திய

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட சமூகம் தலைமுறை தலைமுறையாக வாழ்வதனூடாகக் கற்றுக்கொண்ட நடத்தை முறைகளினதும், பழக்க வழக்கங்களினதும், மரபுகளினதும் இயங்கு நிலைப்பட்ட தொகு



ஓவியம்

தியே பண்பாடாகும். உலகளாவிய ரீதியில் மனிதர்களை அவர்களின் தனித்துவங்களின் அடிப்படையில் வேறுபிரித்து இனங்காட்டுபவை அவர்களின் பண்பாட்டு அமைவுகளேயாகும். அதுவே தேசிய இனங்களையும், அவர்களது மரபு வழியான தாயக நிலப்பரப்புக்களையும், நிர்ணயம் செய்கிறது. உண்மையில் தேசியமும், தேசிய தனித்துவங்களும பண்பாட்டுத் தனித்துவங்களாலேயே கட்டி எழுப்பப்படுகிறன. இதனால்தான் அனைத்துத் தேசங்களும் தம்முடைய பண பாட்டு அடையாளங்களைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் மிகத் தீவிரமான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. மிகவும் விழிப்பான பண்பாட்டுப் பிரக்ஞையுடைய சமூகங்களையுடைய தேசங்கள்கூட இந்த விழிப்பு நிலைப் பாதுகாப்பு நிலையையும் தாண்டி, சட்டரீதியாகத் தமது பண பாட்டுச் சொத்துகளை (Cultural Property) பாதுகாக்கும் விதிகளைக் கொண்டிருக்கின்றன. இக்கட்டுரை பண்பாட்டுச சொத்துக்களை சட்டரீதியாகப் பாதுகாத்தல் தொடர்பான உலக ரீதியான நிலைவரங்களை வரலாற்று ரீதியாக முன்வைப்பதன்மூலம், எமது சமூகத்தில் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான உரையாடலுக்கு உதவ முயற்சிக்கிறது.

தேசங்கள் அல்லது சமூகங்கள் தம்முடைய தனித்துவமான வெளிப்பாடுகளாகக் கொள்ளும் அனைத்தையும் சுருக்கமாகப் பண்பாட்டு சொத்துக்கள் எனலாம். கலைகள், ஐதீகங்கள், வழக்காறுகள், இயற்கை விந்தைகள், தனித்துவமான வனப்பகுதிகள், விஞ்ஞான தொழிநுட்பப் பொருள்கள், புராதன எச்சங்கள், சடங்கியற்பொருள்கள் யாவற்றையும் உள்ளடக்கிய பொருள்களினதும், பெறுமானங்களினதும் தொகுதியாகப் பண்பாட்டுச் சொத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஆறுகள், குளங்கள், வனங்கள் முதலிய இயற்கையின் கொடைகள் போக, அச்சமூகத்தினால் காலங் காலமாக உற்பத்தி செய்யப்பட்டதும், அச் சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் வெளிப்படுத்தி நிற்பதுமான பொருள்களினது தொகுதியே அரும்பொருள்



மாபிள் சிற்பம்

கள் (Antiquities) எனப்படுகிறது. பண்பாட்டுச் சொத்துக்களின் பிரதான பகுதியான இவை, ஒரு சமூகத்தின் நாகரிக மேம்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் பிரதான குறி காட்டிகளாகும். இதனால்தான் ஒரு சமூகம் பற்றிய றிந்துகொள்ள விரும்புமெவரும் அதனுடைய அரும் பொருள்களுக்கு முதன்மை கொடுத்து ஆராய்கிறார்கள்.

### கீர்த்தியின் அடையாளங்கள்

புராதன காலத்தில் அரும்பொருள்கள் அவற்றின் அருந்தலான ஊடகப் பாவனை, நேர்த்தியான கைவினை நுட்பம் முதலிய புறரீதியான (Ext-rinsic) காரணிகளை அடிப்படையாகக்கொண்டே மதிப்பிடப்பட்டன. அதிகாரம், கீர்த்தி என்பன்வற்றின் குறியீடாகவும், பரிமாற்றத்திற்கான (Exchange) ஊடகமாகவும் கொள்ளப்பட்ட அரும்பொருள கள் பொருளாதார, இராணுவ மேலாண்மையூடாகவே அதிக பட்சம் ஈட்டப்பட்டன. யுத்தகாலச் சூறையாடல்களூடாகவும், கப்பங்களூடாகவும், வர்த்தகமூடாகவும் அரும்பொருள்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது அங்கீகரிக்கப்பட்ட நியமமாக இருந்தது. அரும்பொருள்களைக் கைப்பற்றுதலென்பது பண்பாட்டு நிந்திப்பாக அல்லது இழிவுபடுத்தலாக அப்போது கருதப்படவில்லை.

ஆனால், கி.மு.2இல் சிசிலியில் இருந்து யுத்த வெற றிச் சின்னங்களுடன் நாடு திரும்பிய மார்செலஸ் பொலிபியஸால் கடுமையான விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டான. இது ஒரு மாறும் மனப்போக்கை கோடிகாட்டுவதாக உடனடியாகத் தென்பட்டபோதும், வழமையான தங்கம், வெள்ளி உள்ளிட்ட ஆடம்பரப் பொருள்களுக்குப் பதிலாக சிசிலியின் மதச்சின்னங்களைக் காவி வந்தமையே மேற்படி விமர்சனத்திற்கான அடிப்படைக் காரணமாக இருந்தது. இவ்வாறு மதச் சின்னங்களை எடுத்து வந்தமையென்பது, சிசிலியின் கடவுளர்கள் ரோம்மீது சீற்றம் கொள்ளக் காரணமாகிவிடும் என்ற அச்சவுணர்வே அவரது விமர் சனத்தின் தளமாக இருந்தது. இது, இன்னும் நாடுகள் அல்லது பண்பாடுகளின் பேறுகளை (Heritage) மதித்துப் போற்றிப் பாதுகாத்தல் என்ற மனப்பாங்கு ஏற்படவில்லை

யும், அசையாப் பண்பாட்டுச் சொத்துக்கள் அனைத்தையும் காப்பதற்கான சட்ட அணுகுமுறையுடையதாக மேற படி உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டு 1954இல அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மேற்படி சட்டம் எந்தவொரு மக்களுக்கும் சொந்தமாக பண்பாட்டுச் சொத்துக்



தளபாடம்

களை சேதப்படுத்துதல் என்பது, மனித குலத்தின் பண பாட்டுப் பேற்றை சேதப்படுத்தி அழிப்பதற்குச் சமமான தெனக்கூறியது. ஏனெனில், உலகின் அனைத்துச் சமூகங் களின் பங்களிப்போடுதான் உலகப்பண்பாடென்பது தோற்று

*படுத்தி (list) அவற்றின் ஏற்*
*இந்த அணுகுமுறை ப*
*பொருள்கள மீதாகவே பிர*
*பட்டியலில் இதுவரை சே*
*பிடிக்கப்பட்ட பொருளை உ*
*இந்தச் ச*
*மனி, ஜ*
*இத்தாலி*
*அதிகம்*
*★ மூ*
*பாட்டுச்*
*களுக்கு*
*nse) வற்*
*எந்தப் பெ*
*கிறது அ*
*லான ப*
*அறிவு இ*
*பண்பாட்*
*கோர இ*
*ஆனால்*
*மேற்கொ*
*கனடா, இ*
*யுட்பட ப*
*முறையை*
*சிலவே*
கள் ஒருங்கே பின்பற்றப்ப
பிரிப்பு, பட்டியலாக்கமுறை
பெருமளவு நாடுகளில் ஒ
வறிய அல்லது முன்னேறி

## உலக வரலாற்று அனுபவங்களிலி

என்பதையே காட்டுகிறது.

அரும்பொருள்களைக் காத்தல் தொடர்பான தெளிவான கருத்துக்கள் உண்மையில் கி.பி.12களின் பிற்பகுதி



மரச் செதுக்கல்

யிலேயே உருவாகின. ரோம் மூதவை, ரோஜன் தூணை அழிக்காமல் பாதுகாக்குமாறு செய்த ஆணை, கி.பி.16களில பாப்பரசரின் கட்டளை புராதன சின்னங்களைக் காக்குமாறு கோரியமையெல்லாம், இது தொடர்பான முதலுதாரணங் களும், முன்னுதாரணங்களுமாகும்.

ஆனால், இந்த மாறிவந்த கருத்துச் சூழலுக்கு மாறாக, கி.பி.18களில் நெப்போலியன் தனது இராணுவ வெற்றிகளூடாக, ஐரோப்பாவின் பண்பாட்டுச் சொத்துக்களைச் சூறையாடி (Musee Nepoleon) என்ற அரும்பொருளகத்தை அமைத்துத் தனது இராணுவ வெற்றிகளை, அதனூடாகக காட்சிப்படுத்தினான். நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின் இப்பொருள்களில் பெருந்தொகை மீளச் சொந்த நாடுகளிடம் கையளிக்கப்பட்டபோதும், ஐரோப்பிய நாடுகள் தமது சொந்தப் பண்பாட்டுப் பொருள்களைக் காப்பாற்றுவதற் கான சட்ட நடவடிக்கை உட்பட, வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மேற்படி செயற்பாடே ஏற்படுத்தியிருந்தது.

சட்டரீதியாகப் பண்பாட்டுச் சொத்துக்களைப் பாதுகாப பதற்கான முதல் நடவடிக்கை 'Lieber' சட்டம் ஆகும். இது, அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தில், அதன் இராணுவத்தின் பேராசிரியராக இருந்தவொருவரால் உருவாக்கப் பட்ட இந்தச் சட்டரீதியான அணுகுமுறை யுத்தத்தில் பண்பாட்டுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான முன் னேற்பாட்டை வற்புறுத்துவதாக அமைந்தது.

இதன்பின், சர்வதேச ரீதியில் தொகுத்து ஒழுங்குபடுத் தப்பட்ட அரும் பொருள் தொடர்பான சட்ட அணுகுமுறை Hague 1899இலும், 1907இலும் நடத்தப்பட்ட கருத்தரங்கு கள் ஊடாக உருவாக்கப்பட்டது. இது பின்னர், நாசிகளின முன்னெப்போதுமில்லாத பண்பாட்டுச் சொத்தழிப்பு, சூறையாடல்களின் பின்னணியில் வரலாற்றுச் சின்னங்கள், அரும பொருளகம் முதலிய கலை நிறுவனங்கள் உட்பட அசை


விக்கப்பட்டதெனவும் அது விவாதித்தது. ஏறத்தாழ 90 அமைப்புக்களும், அரசுகளும் கைச்சாத்திட்டுள்ள மேற்படி உடன்பாடே முறைப்படி தொகுக்கப்பட்ட அரும்பொருள் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட முதலாவது சட்டநிலைப் பாது காப்பு நடவடிக்கையாகும்.

யுத்தகாலங்களில் மட்டுமல்ல, சமாதானக் காலங்களிலும் பண்பாட்டுச் சொத்துக்களைக் காப்பாற்றுதல் என்பது சிரமசாத்தியமான காரியமாகவே உலகெங்கும் இருந்தது. இன்று ஈழத்தமிழ்ப் பகுதிகளிலும், யுத்த காலத்தில் பண பாட்டுச் சொத்துக்கள் அழிந்ததைவிட, சமாதான காலத் தில் கடத்திச் செல்லப்படுவதே அதிகமாக இருக்கிறது என்பதை இதனோடு பொருத்திப் பார்க்கமுடியும்.

நாடுகள் தமது பண்பாட்டு அடையாளத்தையும், தேசிய பிரக்ஞையையும் வடிவமைக்கும் பிரதான சக்தியாக பண பாட்டுச் சொத்துகளை முழு அளவில் இனங்கண்டன. அதுவே தமது வரலாற்றின், நடப்புக்காலச் சான்றுகளாக வும் இருப்பதன் பகைப்புலத்தில் அவற்றைக் காத்தலென் பது தமது வரலாறு, தேசியம், அடையாளம் என்பவற் றைக் காத்தலே என்ற பின்னணியில் வலுவான சட்டங் களை உருவாக்குவதன்மூலம், அவற்றைக் காத்துக் கொள்ள முனைந்தனர். ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் யாவும் இவ்வகையில் சட்டரீதியாகத் தமது அரும்பொருள்களைக் காக்க முயன்றன. இவ்விதம் உருவாக்கப்பட்ட தேசிய பண்பாட்டுச் சொத்துக்கள் தொடர்பான சட்டங்கள் அடிப்படையில் மூன்றுவிதமான அணுகுமுறை உடையனவாக இருந்தன.

அவையாவன:-

*★ நாடுகள், பிறருக்கு உரிமை மாற்றிக்கொடுக்க முடியாததும், தம்முடையதென உடைமையுரிமை கோருவதுமான சட்ட அணுகுமுறை:- இச்சட்டநியதியின்படி நாடுகள் தமது ஆட்சி எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட அரும்பொருள் முதலானவற்றை வர்த்தகம் செய்யத் தடைவிதிப்பதுடன் திருட்டுப்போய் திரும்பியதையும் உள்வாங்கிச் சேர்த்தலை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சட்டம் இதுவரை கண்டுபிடிக் கப்படாத நிலத்தின் கீழுள்ள தொல்பொருள்கள் தொடக்கம் அறியப்பட்ட தனிநபர் சேகரிப்ப. அரும்*



தூண் போதிகை

*பொருளாம் முதலிய தேசிய சேகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வகைப்பட்ட சட்டங்களைக் கிரேக்கம், ரோம், மெக்சிக்கோ முதலிய நாடுகளில் நடைமுறையில் உள்ளன.*

*★ இரண்டாவது அணுகுமுறை சற்று மிதவாதப் பண்பு டையது:- இந்தச் சட்ட அணுகுமுறை பிரதானமாக பண பாட்டுச் சொத்துக்களை வகைப் பிரித்து, வரிசைப்*

வரை அவை முன்னேறிய
லான பாதுகாப்பு நடவ
வேண்டிய கள யதார்த்த
தினால் தேச எல்லைகளி
காவல்துறையினரை கண்
முதலிய நடவடிக்கைகளை
தேசிய சட்டங்கள் அந்த
படுவதால் அவை ஒருவகை
இதனை உலகளாவிய
செய்யும்போது மேற்படி
மாவதோடு சர்வதேச பாது
இந்த வகையில் உருவான
கான சர்வதேசச் சட்டங்கள்
திருட்டுப்போன சொத்து
திருட்டிலிருந்து காக்கவெ
1970இன் UNESCO ச
களை விதிமுறைக்கு மாற
தல், உரிமை மாற்றம் செ
செய்த முதலாவது சர்வதே

## பாக்கியநா

யுனெஸ்கோ பண்பாட்டுச்
வில் வரையறை செய்தது.
கள், தொல்வரலாறு, வரல
ஞானம், மூலச்சுவடிகள்,
களிற்கே சிறப்பான செடி
முதலியன யாவும் இதனு
சட்டவரைவை உருவாக்கு
பெற்ற நாடுகளும், வறிய
உடைய நாடுகளும் முன்ன
தகைய நாடுகளின் அரும்
ஒப்பிடுகையில் அதிகம்
அமெரிக்காவுட்பட்ட பண்
மதி செய்யும் நாடுகள் இச்
இவ்வாறு முழுவளவுத்
அகழ்வாய்வுகளையும் தி
UNESCO போல UNID
கொண்டுசெல்லப்பட்ட
என்பதை வலியுறுத்துகி

### பாதுகா

இலங்கையில் 1940
கட்டளைச் சட்டம் அரும்

# ...ட்டரீதியாக ...யமாகுமா?

...அவற்றின் ஏற்றுமதியை எல்லைப்படுத்துகிறது. ...வகுமுறை பட்டியலிடப்பட்ட (Inventory) ...மீதாகவே பிரயோகிக்கப்படலாம். அறியப்படாத ...இதுவரை சேர்க்கப்படாத புதிதாகக் கண்டு ... பொருளை உடனடியாகக் காப்பாற்றுவதற்கு இந்தச் சட்டம் அதிகம் பயன்படாது. ஜேர்மனி, ஜப்பான் சிற்றளவில் பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளால் இம்முறை அதிகம் பின்பற்றப்படுகிறது.

★ மூன்றாவது அணுகுமுறை பண்பாட்டுச் சொத்துக்களின் ஏற்றுமதிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை (license) வற்புறுத்துவது:- இதற்கு நாடுகள் எந்தப் பொருளின ஏற்றுமதியைத் தடுக்கிறது அல்லது அனுமதிக்கிறது. முதலான பண்பாட்டுச் சொத்துக்கள் மீதான அறிவு இதற்குத் தேவையில்லை. எந்தப் பண்பாட்டுச் சொத்து மீதும அனுமதி கோர இது சட்டரீதியாக அனுமதிக்கும். ஆனால் தக்க முடிவு அரசினாலேயே மேற்கொள்ளப்படும். பிரித்தானியா, கனடா, இத்தாலி, பிரான்ஸ் இலங்கையுட்பட பல நாடுகள் மேற்படி அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன.

சிலவேளைகளில் இந்த நடைமுறை ...க பின்பற்றப்படுவதுமுண்டு. குறிப்பாக வகை ...லாக்கமுறையும், அனுமதிப்பத்திர முறையும் ... நாடுகளில் ஒன்றாகப் பின்பற்றப்படுகிறது. ...லது முன்னேறிவரும் நாடுகளைப் பொறுத்த

## ...லிருந்து...

...வ முன்னேறிய நாடுகளைவிட ஆகக்கூடுத ...காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ...ள யதார்த்தமுடையனவாகவுள்ள காரணத் ...ச எல்லைகளில் இவற்றைக் கண்காணிக்க ...யினரை கண்காணிபபில் ஈடுபட வைத்தல் ...வடிக்கைகளை அவை மேற்கொண்டுள்ளன. ...சட்டங்கள் அந்தந்த நாடுகளுக்குள்தான் செயற ...வை ஒருவகையில் வரையறுக்குட்பட்டவை. ...லகளாவிய பொதுச் சட்டங்களால் அரண் ...து மேற்படி தேசிய சட்டங்கள் மேலும் பல ...ர்வதேச பாதுகாப்பும் கிட்டும் வாய்ப்புள்ளது. ...யில் உருவான பண்பாட்டுச் சொத்துக்களுக் ...தசச் சட்டங்கள் அடுத்தகட்ட வளர்ச்சியாகும். ...ான சொத்துக்களை மீளப்பெற அல்லது ...ந்து காக்கவெல்லாம் இது உதவியது. ... UNESCO சட்டமூலம் பண்பாட்டுச் சொத்துக் ...முறைக்கு மாறாக ஏற்றுமதி, இறக்குமதி செய ...ம மாற்றம் செய்தல் முதலியவற்றைத் தடை ...லாவது சர்வதேசச் சட்ட நடவடிக்கையாகும்.

## ...தியநாதன் அகிலன்

... பண்பாட்டுச் சொத்துக்களை மிகப் பரந்தள ...றை செய்தது. அகழ்வாய்வு மூலமான பொருள ...வரலாறு, வரலாறு, இலக்கியம், கலை, விஞ் ...லச்சுவடிகள், நாணயங்கள் அந்தந்த நிலங் ...றப்பான செடிகள், உயிரினத் தொகுதிகள் ... யாவும் இதனுள் அடக்கப்பட்டன. இந்தச் ...வ உருவாக்குவதில் அண்மையில் சுதந்திரம ...களும், வறிய ஆனால் மகத்தான கலைப்பேறு ...டுகளும் முன்னின்றுழைத்தன. ஏனெனில், இத் ...களின் அரும்பொருள்கள் ஏனையவற்றோடு ...ில் அதிகம் துஷ்பிரயோகத்திற்குள்ளாகின. ...படட பண்பாட்டுச் சொத்துக்களை இறக்கு ... நாடுகள் இச்சட்டத்தினை எதிர்த்தன. அவை ...முழுவளவுத் தடையைக் கொண்டுவராமல்,



பட்டியலாக்கம் செய்யப்பட்டவற்றை மட்டும் தடுக்குமாறு கோரியது. இது அமெரிக்கா போன்ற நீண்ட பண்பாட்டுப் பாரம்பரியமும் பேறுமற்ற ஆனால் இராணுவ பொருளாதார மேலாண்மையுடைய நாடுகளின் தந்திரமாகவே இருந்தது. தம்மிடம் இல்லாததை மற்றவர்களிடமிருந்து உருவித் தமதாக்கிக் கொள்வதில் மேற்படி சட்டம் அவர்களுக்கு இடர்பாடாக அமைந்தது.

1995ஆம் ஆண்டின் UNIDROIT சட்டம், பட்டியலிடப்படாத திரும்பக் கிடைத்த பண்பாட்டுப் பொருள்களையும், சட்ட அனுமதியற்ற ...களையும் திருட்டு என்பதாகவே பார்க்கிறது. ...போல UNIDOITயும் சட்ட அனுமதியற்று ...ல்லப்பட்ட பொருகள்களை மீளப் பெறுதல் ...வலியுறுத்துகிறது.

..., பாதுகாக்கச் சட்டம்

...கயில் 1940ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் ...சட்டம் அரும்பொருள் பேணுகை, பாதுகாப்புத் தொடர்பான விதிகளைக் கொண்டிருக்கிறது. இதன் I.ஆம், II.ஆம் பகுதிகள் அகழ்வாய்வு - தொல்பொருள்கள பற்றியும், III.ஆம் பகுதி புராதன நினைவுச் சின்னங்கள் (Ancient Monuments) தொடர்பான விதிகள் பற்றியும், IV.ஆம் பகுதி தொல்பொருகள் கையிருப்புக்கள் பற்றியும பேசுகிறது. இதன் V.ஆம் பகுதி அரும்பொருள்களின் ஏற்றுமதி தொடர்பாகப் பேசுகிறது. இலங்கை நாடாளுமன்ற நியதிச் சட்டப்படி அரும்பொருள்கள் என்பதனுள் பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளதை அதன் வியாக்கியாணம் எனும் VIII.ஆம் பகுதி குறிப்பிடுகிறது. புராதன நினைவுச் சின்னங்கள் (கோயில்கள், தேவாலயங்கள், கல்லறைகள், புதைமேடுகள் மற்றும் கட்டடங்கள் முதலியன) சிற்பங்கள், சிறப்பணி செய்யப்பட்ட மாபிள்கள், கற்கள், செதுக்குகள், எழுத்துப் பொறிப்புகள், ஓவியங்கள், எழுத்துக்கள், பீங்கான் மணிக்கற் செதுக்கல, உலோக வெளிப்பாட்டுக் கலை மாதிரிகள், நெய்தற்கலை, ஆபரணங்கள், அலங்கார உருக்கள், நாணயங்கள், இரத்தினக்கற்கள், ஆயுதங்கள், கருவிகள் மற்றும் ஏனைய அசையும் கலைப் பொருள்கள் என்பன இதனுள் பட்டியலிடப்பட்டுள்ளது.

மேற்படி கட்டளைச் சட்டம், தொல்பொருளியல் ஆணை




தளபாடம்

யாளரால் (Archeological Commissiner) வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமற்ற எவரும் அரும்பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்கிறது. மேலும் ஏற்றுமதி அனுமதிப் பத்திரத்தில் கோரப்பட்ட ஏதாவது பொருள்கள் நிராகரிக்கப்படுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி அதனை கொழும்பிலோ அல்லது ஏனைய பிரதேச அரும்பொருளகத்திற்காகவோ கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் கொள்வனவு செய்வதற்காக சட்டநடுவர்களை (Arbitrators), மத்தியஸ்தர் (Umpire) பயன்படுத்துவது பற்றி பகுதி VII இல் பேசப்படுகிறது. மேற்படி நடவடிக்கைகள் தொடர்பாக தொல்பொருளியல் ஆணையாளர் ஆகக்கூடிய அதிகாரமுடைய உத்தியோகத்தராகவுள்ளார் - பகுதி VI. அவரது அதிகாரம், கடமை என்பன பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

இவற்றினூடாக இலங்கையரசு தனது பண்பாட்டுச் சின்னங்களை தேச எல்லை கடந்து செல்லவிடாது கட்டுப்படுத்துவதுடன், பேணிப் பாதுகாத்தல் தொடர்பானதுமான சட்ட அடிப்படைகளையும் கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தொல்பொருள் பாதுகாப்பு என்பது இன்றியமையாத ஒரு தேசிய நடவடிக்கையாகும். ஏற்கனவே, பல்வேறு அந்நியப் படையெடுப்புக்களாலும், இனவாத அரசுகளாலும், பண்பாட்டுப் பிரக்ஞையற்ற நம்மவர்களாலும் அழிக்கப்பட்டவை போக, இப்போது எஞ்சியிருப்பவை ஒப்பீட்டளவில் மிகவும குறைவானவைதான்- அவற்றிலும் குறிப்பிட்ட தொகை திறக்கப்பட்ட கண்டி வீதியால் எடுத்துசெல்லப்பட்டும் விட்டன. ஆனால், 'காணவும், பேணவும் நம்மிடமுள்ள' இந்தச் சிலவே எமது வரலாற்றையும், அதன் இடையறாத் தொடர்ச்சியையும், இனத் தனித்தன்மையையும் காட்டி நிற்கப்போகும் சான்றுகள். ஏற்கனவே வந்தேறு குடிகள் என இனவாதக் கண்ணோட்டமுடைய சிங்களவர்



தளபாடம்

களால் கூறப்படும் நாம், அதனை நிரூபிக்கும் கைங்கரியத்தையும் இவ்வாறு வரலாற்றுச் சின்னங்களை பார்த்திருக்க 'பறியவிடுதல்' ஊடாகச் செய்தவராவோம். நமது அசட்டையும், அசமந்தப்போக்கும் இரண்டக நிலையும் ஒரு தேசிய இழப்புக்கும், குற்றத்துக்கும் நம்மை இட்டுச்சென்று விடுமோ என்ற நியாயமான அச்சத்தை தயவுசெய்து செவிமடுப்போமா? ★

# குடாநாட்டின் கல்வித் தரம்: நேற்று - இன்று - நாளை

'அபிவிருத்தி' என்பது எல்லாத் துறைகளிலும் இன்று மிகமுக்கியமாக கருத்திற்கொள்ளப்பட்டு அதற்கான ஆய்வுகளும் திட்டங்களும் பயிற்சிகளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும், ஈழத்தின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற நோக்கிலேதான் சிந்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது பிரதேசங்களில் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட துறைகளில் கல்வித்துறை குறிப்பிடத்தக்கதாகும். பௌதிக வளங்களைப் பற்றிய கூடிய ஈடுபாடு இத்துறையினரால் மேற்கொள்ளப்படுவது இயற்கையே. கட்டடங்கள், தளபாடங்கள், நவீன கருவிகள் என்பன அவர்களின் எண்ணங்களின் பெரும் பகுதியினை ஆக்கிரமித்துவிட்டன. இந்தநிலையில் இன்னுமொரு கோணத்தில் எமது கல்வித்துறையை நோக்குபவர்களும் விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். 'கல்வியின் தராதரம்' யாழ்ப்பாணப் பாடசாலைகளில் வீழ்ச்சியடைந்துள்ள அதேநேரத்தில் வன்னிமாவட்டத்தின் பாடசாலைகளில் வீழ்ச்சியடையவில்லை என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. மிகுந்த கஷ்டங்கள்,

> **இன்று உலக ஆசிரியர் தினம். கல்விதான் பெரும் செல்வம் என மதிக்கும் குடாநாட்டுச் சமூகம் இன்று அந்தப் பெருமையை இழந்துகொண்டிருக்கிறது என்ற ஏக்கம் பலரிடம். இன்றைய தினத்தில் பலரது சிந்தனையும் இதைப்பற்றித்தான்.**
>
> **யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படும் ஆதங்கங்களின் மத்தியில் இன்றைய ஆசிரியர்தினம் முக்கியத்துவம் பெறுகிறது.**
>
> **நீண்ட கொடிய போர்ச் சூழ்நிலையிலும் கல்வித் தரத்தைக் கட்டிக் காத்த யாழ். கல்விச் சமூகம் சகஜ நிலை திரும்பும் இந்தக் காலகட்டத்தில் அதனைக் கோட்டைவிட்டுவிடுமோ?**
>
> **இந்த நிலையைப் பார்த்துக்கொண்டு வெறுமனே வாளா இருப்பது சரியா?**
>
> **'குடாநாட்டு கல்வித்தரம்: நேற்று - இன்று - நாளை' என்ற இந்தப் பகுதியினூடாக ஆசிரியர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வெளியிடப்பட உள்ளன.**
>
> **சுருக்கமாகவும் இறுக்கமாகவும் உங்கள் கருத்துக்களை வரைந்து அனுப்புங்கள்.**
>
> **ஓய்வுபெற்ற மூத்த ஆசிரியரும் அதிபருமாகிய சுடர் இ.மகேந்திரனின் கருத்துக்கள் இன்று இங்கே பிரசுரமாகின்றன.**

சோதனைகள், வசதியீனங்களுக்கு மத்தியில் வன்னிப் பிரதேச மாணவர்கள் கல்வியில் வளர்ச்சியைக் காட்டுகின்றபோது ஒப்புநோக்கில் சகல வசதிகளுடன் இருந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஏன் வளர்ச்சியைக் காட்டவில்லை? தளர்ச்சியை காட்டுவது ஏன்? இந்த நிலையினைப் பற்றி பெரிதாகக் கூக்குரல் போடுவதைவிட இப்பிரச்சினையைத் தீர்க்கத்தக்க வழிவகைகளைக் கூறுவது - ஆராய்வதுதான் பொருத்தமானதாகும்.

அன்றும் இன்றும் கல்வி அபிவிருத்தியின் அச்சாணியாகக் காணப்படுபவர்கள் ஆசிரியர்கள்தான். கல்விக் கொள்கைகள் மாறலாம். பாடத்திட்டங்கள் மாறலாம். கல்வி முகாமைத்துவம் புதியதொரு வடிவத்தினை எடுக்கலாம்.

ஆனால், மாற்றங்களை உண்மையாக நடைமுறைப்படுத்துபவர் யார்? ஆசிரியர்தான். எல்லாவற்றிற்கும் மேலாக எவரைநோக்கி இவையாவும் செய்யப்படுகின்றனவோ அவர்களை அன்புத்தாயாக அரவணைத்து தந்தையாக வழிகாட்டி, நண்பர்களாக துணைநின்று கல்வியுடன் ஒழுக்கத்தையும் ஒன்றுசேரக் கொடுப்பவர் யார்? ஆசிரியர்தான். மாணவர்களின் நற்பண்புகளுக்கும் திறமைகளுக்கும் உறுதுணையாக அமைபவர் ஆசிரியர். ஆகவே, யாழ்ப்பாணத்தில் கல்வி வீழ்ச்சிக்கு பதில் சொல்லவேண்டிய முதற்கடமை ஆசிரியரேதான் என்று சொல்ல முன்வருவது நியாயமா? வீழ்ச்சிக்குரிய காரணிகளை ஆராயும்போது இந்த முடிவு நியாயமற்றது என்பது புலனாகிறது. உண்மையில் 'கல்விச்சமூகம்' இதனைப் பொறுப்பேற்கவேண்டும்.

அன்றைய ஆசிரியர்கள் கற்பித்த சூழல் முற்றிலும் வித்தியாசமானதாகும். குறைந்த வேதனம் பெற்றிருந்தாலும் சேவை மனப்பான்மையோடு தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர்கள் ஆசிரியர்கள் என்ற அபிப்பிராயம் மேலோங்கிக் காணப்படுகின்றது. கூடிய நல்ல வேதனத்தோடு மாறுபட்ட சூழலில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு மனப்பாங்கற்றவர்கள் என்று கூறுவது நியாயமற்றதாகும். என்றாலும் இத்தகைய அபிப்பிராயம் சிலரிடம் காணப்படுவது உண்மையே.

மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளைக் கண்டறிந்து வளர்க்கவேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடமை. அப்படிப் பார்க்கின்றபோது பல பாடசாலைகள் பாடசாலை முடிவடைந்தபின் உயிர்த்துடிப்புடன் இயங்குவதில்லை. போட்டிப் பரீட்சைகள், தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களை ஆக்கிரமித்துவிட்டன. எனவே, மாலைநேர விளையாட்டு, மாலை நேர கட்டாய வகுப்பு என்று மாறிவிட்டது. "மாலை முழுவதும் நல்ல விளையாட்டு" என்று பாடிய புரட்சிக் கவி இன்றைய நிலையில் " மாலை முழுவதும் நல்ல தனியார் வகுப்பு" என்று பாடியிருப்பானோ? இந்த நிலையை மாற்றவேண்டிய ஆசிரியர்களே இந்தக் குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக எண்ணப்படுவதுதான் வேதனை. எனவே, இன்றைய ஆசிரியர்கள் - எமது புதிய தலைமுறை - புதிய வேகத்தோடு புயலென எழவேண்டும். மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, ஒழுக்கம் என்பவற்றை எமது மாணவ சமுதாயத்தில் வேரூன்றி வலுப்பெற வைக்கவேண்டும். ஆசிரியர் தினத்தில் "புதியதோர் உலகம் படைப்போம்" என்று புரட்சி கோஷத்துடன் புதிய வேகத்துடன் செயற்பட, பணி செய்ய ஆசிரியர்கள் முடிவுசெய்யவேண்டும்.

'ஆசிரியப்பணி', இன்று இரண்டு முகத்துடன் காணப்படுகிறது. அரசாங்க சம்பளம் பெறும் ஆசிரியர்கள், வணிக நோக்கத்துடன் இயங்கும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள். மாணவர்களின் விசுவாசம் யாருடைய பக்கம்? மாணவர்கள் தாம் யாரில் தங்கியிருப்பதாக எண்ணுகிறார்கள்? பெற்றோர் தமது பிள்ளைகளின் வெற்றி யாரில் தங்கியிருப்பதாக எண்ணுகிறார்கள்? ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் சாயந்திர வேளைகளில் விளையாடப் போகாமல் தனியார் வகுப்புகளுக்கே செல்வது ஏன்? இது சரியா? மாணவர்களை பரீட்சை நோக்கில் கசக்கிப் பிழியும் பெற்றோர்கள் யோசிக்க வேண்டும். அறிவு என்பது பரீட்சையின் வெற்றியில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை சித்தியடையாத பலர் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். சின்னஞ்சிறுவர்களை சாயந்திர வேளைகளில் தனியார் கல்வி நிலையங்களில் வைத்து கற்பிப்பது உடன் நிறுத்தப்பட வேண்டும் என்பது சரியானதொரு நிலைப்பாடாகும்.

## சுடர் இ.மகேந்திரன்

பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்களைக் கற்பிக்கும்போது அவர்களை அந்தக் கற்பித்தலில் பூரண நிறைவு காணச்செய்யவேண்டும். இதனைச் செய்ய வேண்டுமானால் ஆசிரியர்கள் தம்மை நன்கு தயார்ப்படுத்தியிருக்க வேண்டும். பல்வேறு துறைகளில் நவீன முறைகளைக் கையாள்வதுபோல ஆசிரியர்களும் கையாள வேண்டும். நடமாடும் கலைக்களஞ்சியங்களாக இல்லாவிட்டாலும் மாணவர்களுக்குத் தேவையான புதிய செய்திகளையும் கருத்துக்களையும் கொடுக்கத்தக்கவர்களாக ஆசிரியர்கள் காணப்படவேண்டும். ஆசிரியர்களை இவ்வாறு தயார்ப்படுத்தக்கூடிய ஆசிரிய கல்விமையங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த நவீன ஆசிரிய கல்வி மையங்கள்மூலம் ஆசிரியர்கள் புதிய வேகத்தையும் திறமைகளையும் பெறவேண்டும்.

இன்றைய நிலையில் ஆசிரியர்கள் புதிய வேகத்துடன் எழ திடசங்கற்பம் செய்யவேண்டும். ஆசிரியர்கள் - எமது சமுதாயத்தின் அச்சாணி. எமது எதிர்காலத்தை அமைக்கும் சிற்பிகள். அவர்கள் புதிய எண்ணங்களுடன் புரட்சிகரமாக இயங்க முன்வரவேண்டும். ★




அறியாமை நோயை
அகற்றிடும் வைத்தியா,
தெரியாமை போக்கித்
தெளிவு கொடு!
நவீன சிந்தைகளோடு
நாளைய சந்ததிக்கு
நகர்வினைக் காட்டு!
ஒழுக்க விழுமியங்களால்
வழுக்கள் களையும்
பழக்கம் சொல்!
உன் ~ அறிவுப் பயிரின்
அபார விளைச்சல்
அறுவடைக்கல்ல
புத்தாக்கத்தின் ~
கருவறைக்கு!

- மானியூர் ரட்ணேஸ்.

## யா/நயினாதீவு மகாவித்தியாலய

க.பொ.த.(உயர்தர) விடுகைவருட மாணவர்கள் பெருமையுடன் நடத்தும்

### மாபெரும் ஆசிரியர்தின விழா

*காலம்:* இன்று (06.10.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00
*இடம்:* நயினாதீவு மகா வித்தியாலய கலையரங்கு.
*பிரதமவிருந்தினர்:* ப.விக்கினேஸ்வரன அவர்கள்
*(கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம், வேலணை)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

யா/நயினாதீவு மகா வித்தியாலயம் (9104) உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியம்.



## கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை
## ஆலய திருவிழா



இன்று (06.10.2002) ஞாயிறு காலை 7 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்படும். மாலை 5 மணிக்கு தேர்ப்பவனியும் திருச் சொருப ஆசீரும் இடம்பெறும்.

பங்குத்தந்தை, பங்குமக்கள்

அன்னையின் ஆசிபெற வாழ்த்துவோர்
(9105) எஸ்.ஜேசுதாசன் குடும்பத்தினர்.



## ஒக்ரோபர் - 06

கல்வியைப் புகட்டி
காசினியில் புகழீட்ட
மாணவச் செல்வங்களை நல்வழியில் வழி நடத்தும் ஆசிரியர்களுக்கு எம்மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
(C/24067) இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.



## ரஷ்யாவில் உயர்கல்வி

### மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

- ★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
- ★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்

முதலாம் வருடம் - 3400 U.S.D.
இரண்டாம் வருடத்திலிருந்து 3000 U.S.D.
(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)
அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்
தொடர்பு: Uthayajothy
(Final Year Student in the University)
T.P.: Local 077-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com
(C/24048)



## நன்றி நவில்கின்றோம்



## திரு.திருமதி இந்துநேசன் சிவப்பிரியா
### தம்பதிகள்

இல்லறவாழ்வில் 11.09.2002 புதன்கிழமை இறைவன் திருவருளால் இனிதே இணைந்து சிறப்பாக நடைபெற்ற எங்களது திருமாங்கல்ய தாரண வைபவத்தின் போது மட்டிலா மனமகிழ்ச்சியுடன் வந்து விழாவிற் கலந்து எம்மை ஆசீர்வதித்து வாழ்த்தியருளிய எமது உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் திருமண விழாவுக்கு சகல வழிகளிலும் பல்வேறு உதவிகள் புரிந்த பெரியோர்கள், இளைஞர்கள், திருமணமண்டபத்தைத் தந்துதவிய யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தினர் மற்றும் அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

*"சுகன் அகம்"*
*84/1A, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

அன்புடன்
திரு.திருமதி
இந்துநேசன் சிவப்பிரியா
தம்பதிகள். (9089)


## ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய வரிகள் (ஆதனவரி தவிர்ந்த) வாடகைகள், குத்தகைகள் போன்ற சகல அறவீடுகளுக்கும் இதுவரை காலமும் அறவிட்டு வந்த 12.5 வீத பண்டங்கள் சேவைகள் வரிக்குப் பதிலாக பெறுமதிசேர்வரி 20 வீதம் அறவிடப்படுவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## வதிவிடச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.5

தேசிய, கீழைத்தேய மொழிகள் மனிதவள அபிவிருத்திப் பிரிவு சமூகக்கல்வி அபிவிருத்தி தொடர்பான 3 நாள் வதிவிடச் செயலமர்வு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதிமுதல் 14 ஆம் திகதிவரை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் சமூகக்கல்விப் பாடத்திட்டத்துக்கான வினா வங்கி, சமூகக்கல்வி பாடத்துக்கான தளவட்ட அறிமுகம், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சமூகக் கலவிப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பை யாழ்.மாவட்டத்தில் நடத்துதல் மற்றும் சமூகக்கல்வி பாடத்திற்கான ஆசிரியர் கைந்நூல் பற்றாக்குறை, அதற்கான தீர்வு ஆகிய முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் கலந்துகொள்ளும் இவ்வதிவிட செயலமர்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள், வலயத்திலுள்ள சமூகக்கல்வி சிரேஷ்ட ஆசிரியர்கள்,சமூகக்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாட அபிவிருத்தி தொடர்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் கேட்டுள்ளார். (எ-5)


## யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
## உலக ஆசிரியர் தினம் - 2002

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'

எமது வித்தியாலயத்தில் எமது சிறார்களுக்கு கல்விக் கண்ணைத் திறந்து அரும்பணி ஆற்றிவரும் அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் உலக அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்து, இப்பணி இனிதே தொடர மனமுவந்து நல்லாசிகளுடன் வாழ்த்துகின்றோம்.

*றக்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/24076)

பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர், நலன்விரும்பிகள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.



## நீங்காத நினைவில் ஓராண்டு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 17 |
| - | - |
| 03 | 09 |
| - | - |
| 1923 | 2001 |



## திருமதி கந்தையா சீதாலட்சுமி

*அன்புக்கும் பண்புக்கும் பொறுமைக்கும் உதாரணமாக*
*வாழ்ந்து எங்களை அரவணைத்து ஆறுதல் கூறி*
*நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள்*
*எமை ஆறாத்துயரில் விட்டு இறையடி சேர்ந்து*
*ஓராண்டு பூர்த்தியாகும் இந்நாளில் உங்கள்*
*நினைவுகளில் மூழ்கித் தவிக்கும் நாங்கள் உங்கள்*
*ஆத்மா இறையடியில் நிரந்தர சமாதானமடையப் பிரார்த்திக்கின்றோம்.*

29/13, உடையார் லேன்,
கொக்குவில்.
M3/10 சொய்ஸாபுரம்,
மொறட்டுவ.

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(9090)



# Canadian College of Business & Computers




**Scholarships will be awarded as follows:**

10 Awards of Partial Tuition CDN $ 17,000 each
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each

Scholarship application forms are available at:
24, Temple Lane,
Colombo 3,
Sri Lanka.
Tel: 507176

The deadline for receipt of completed applications is October 10th, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address from 5th to 10th October 2002

Scholarship Application & Admission
Canadian College of Business & Computers
Room 2G-02
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Copy of your Passport
3. Copy of your Birth Certificate
4. Copy of your Educational Certificates/Transcripts
5. Employment Letter (if any)
6. Proof of sufficient funds for living expenses for two years – (US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000, depending on the scholarship award you would receive
7. Fee of US $ 13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

**Aptitude Test**
Date: October 12th and 13th
Time: 10:00 am to 4:00 pm

**Interview**
Date: October 14th
Time: 10:00 am to 4:00 pm

**Location**
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Ready for the challenge? Welcome to Canada for your studies.**

Contact Person: Meena Thyagarajan
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: meena@ccbc.ca

estudies "Education is the foundation of Human Development, Security and PEACE" WWW.CCBC.CA

# தமது கல்வியை தமிழரே தீர்மானிக்கும் நிலையை ஏற்படுத்த போராடுவோம்!

## ஆசிரியர் தினச்செய்தியில் மகாசிவம் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

'தமிழர்களின் கல்வியைத் தமிழர்களே தீர்மானிக்கக் கூடியதான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தப் போராட உலக ஆசிரியர் தினத்தன்று உறுதிகொள்வோம்.'

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம். ஆசிரியர் தினத்தையொட்டி அவர் விடுத்த செய்தியிலேயே இதனை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவச் சூழல் அற்ற ஆரோக்கியமான கல்விச் சூழலில் வடக்குக் கிழக்கிலுள்ள பாடசாலைகளில் ஏற்படுத்தி தமிழ் மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும், தமிழர்களின் கல்வியைத் தமிழர்களே தீர்மானிக்கக் கூடியதான அரசியல் சூழலையும் ஏற்படுத்தவும், சம்பளமீளாய்வுக்குழுவின் சிபாரிசுகளை உடனடியாக அமுல்படுத்தக் கோரியும், தமிழ்மொழிமூல ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைகள் தொடர்பாகக் கல்வி அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை அமுல்ப்படுத்தக் கோரியும் போராட சர்வதேச ஆசிரிய தினத்தன்று தமிழர் ஆசிரியர்களாகிய நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாடசாலையை விட்டு வெளியேறிய இராணுவம், பல இடங்களில் பாடசாலைச் சூழலில் உள்ள அனைத்து வீடுகளிலும் குடிகொண்டிருக்கின்றது. மாணவர்கள் விசேடமாகப் பெண் ஆசிரியைகளும் மாணவிகளும் இரு பக்கங்களிலும் இராணுவத்தினர் குடிகொண்டிருக்கும் மைல் கணக்கான பாதைகளைக் கடந்து பாடசாலைக்குச் செல்லும் நிலை கற்பித்தலுக்கோ அல்லது கற்றலுக்கோ ஏற்ற ஆரோக்கியமான உளநிலையை, சூழலை வழங்காது. எனவே, படை முழுமையாக பாடசாலைச் சூழலைவிட்டு அகற்றப்பட வேண்டும்.

2001இல் வழங்கப்படவேண்டிய 3000 தமிழர் ஆசிரிய நியமனங்கள் இழுத்தடிப்பு செய்யப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றது. இந்நியமனங்கள் உடனடியாக மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

ஆசிரிய சேவையில் பதவி உயர்வு சுயமாக வழங்கும் வேலைகள் இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டு வரப்படுகின்றது. அமைச்சு பதவி உயர்வுகளைச் சுயமாக வழங்கும் திட்டத்தினை மேலும் தாமதிக்காமல் நடைமுறைப் படுத்தவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

கல்வி அமைச்சரால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஏட்டுச் சுரக்காயைப் போல் இருக்கின்றன. அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவுமே முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. தமிழர் ஆசிரியர் சங்கத்தை யாரும் ஏமாற்றமுடியாது. அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை அடுத்த ஒரு மாத காலத்தில் நிறைவேற்றாவிட்டால், நேரடித் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கத் தயாராகுமாறு ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் - என்றுள்ளது. (ஒ-3)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.6

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை திங்கட்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகின்றது.

அன்றுமுதல் தினமும் பிற்பகல் 4.00 மணிக்கு நவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. விஜயதசமியன்று வித்தியாரம்பம் நடைபெறும். (ஐ)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பொருள் உதவி

மண்டைதீவு,ஒக்.6

வன்னிப் பகுதியில் இருந்துவந்து மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைக்கான வீட்டுப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐநா.தூதரகப் பிரதிநிதிகள் இந்த நிவாரணப் பொருள்களை வழங்கினர்.

கிராமசேவையாளர் மரியதாஸ் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றி பொருள் விநியோகத்தை மேற்கொண்டனர்.

பாய்கள், பிளாஸ்ரிக் வாளிகள், நீர் கான்கள் உட்பட பல பொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-ரி)

# கல்வி உள்ளீடு கொள்வனவு நிதியை முடக்குவது வரவேற்கத்தக்கதல்ல!

## மேலதிக கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

அச்சுவேலி,ஒக்.6

"தரமான உள்ளீடு கொள்வனவு நிதியை உரியமுறையில் பயன்படுத்தி பாடசாலைகளின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேல்நிலைப்படுத்த வேண்டும். இந்தநிதி உதவியை பொருத்தமான முறையில் பயன்படுத்தாமல் முடக்கிவைத்திருக்கின்ற நிலை வரவேற்கத்தக்கது அல்ல."

-இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா.

அச்சுவேலி மத்தியகல்லூரி பரிசளிப்பு விழா, கல்லூரி அதிபர் திருமதி ச.கனகராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பாடசாலையின் தரம் மாணவர் தொகை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு தோறும் தரமான உள்ளீடு கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

இந்த நிதியின் செயற்பாட்டு நடைமுறை தொடர்பான விதிமுறைகளும் ஆலோசனைகளும் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்ற முறையில் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பொருத்தமான முறையில் நிதியைப் பயன்படுத்தாமல் சில அதிபர்கள் முடக்கிவைத்துவிடுகின்றனர். இது வரவேற்கத்தக்கதல்ல. 2000ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் தரமான உள்ளீடு கொள்வனவுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுவருகின்ற போதிலும் பயன்பாட்டு நடைமுறை சீரடையவில்லை.

கணனியின் உபயோகம் பற்றிய முழுமையான விழிப்புணர்வு எமது மாணவர்கள் மத்தியில் ஏற்படவில்லை. இதற்கான காரணம் ஆங்கில அறிவு குறைவான நிலையில் இருப்பதேயாகும். இப்பொழுது யாழ்.மாவட்டத்தில் கணனியின் பயன்பாடு தட்டச்சுப் பொறியின் மட்டத்திலேயே உள்ளது - எனக்கூறினார். (ஓ-17)

## வலி.கிழக்கில் அபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம்,ஒக்.6

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 12 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

கடந்த மாதம் 14ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இந்த நிதி ஒதுக்கீடு குறித்து தீர்மானிக்கப்பட்டது. (ஒ-4-180)

# இலங்கையின் ஆட்சியாளர்களே உலகில் பெரும் பயங்கரவாதிகள்!

## சாடுகிறார் இரா.சம்பந்தன் எம்.பி.

உலகில் உள்ள நாடுகளில் உள்ள அரசுகளில் இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகளே பயங்கரவாத அரசுகளாகும்.

ஆனால், ஒரு நாட்டின் அரசை பயங்கரவாத அரசாக வகைப்படுத்தும வழக்கம் இல்லாமையால் இலங்கை அரசுகள் பயங்கரவாத அரசு என்று குறிப்பிடப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டுள்ளன.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு இரா.சம்பந்தன் மேலும் கூறியதாவது:

இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களால் சுமார் 75 ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்களும் 17ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். தமிழர்களின் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் அழித்த கொடூரமான பயங்கரமான செயல்களையும் இந்த அரசுகளே செய்தன.

தமிழ் மக்களை ஆயுதப் பலம் மூலம் கொன்றொழிப்பதில் பல வருட காலமாக இலங்கையின் பேரினவாத அரசுகள் ஈடுபட்டு வந்துள்ளன. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்த நடவடிக்கைளை முறியடித்து தமிழ் மக்களைக் காப்பாற்றியுள்ளனர்.

தமிழ்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவம் எம்மக்களைக் கேட்டு முகாம் அமைக்க வேண்டுமேயொழிய நாம் அவர்களைக் கேட்டு எம் வீடுகள், கிணறுகள், ஆலயங்களுக்கு செல்ல வேண்டும் என்றில்லை. பலாலி படைத்தளத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கூட இதனை படைத்தளபதிக்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

தென்பகுதியில் உள்ள பேரினவாதக் கட்சிகள் தமிழ்மக்கள் பிரச்சினை சம்பந்தமாக பல குழப்பங்களை காலத்திற்கு காலம் உருவாக்கி வருகின்றன. இதனை முறியடிக்க வேண்டுமாயின் தமிழ்மக்கள் ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் நிற்க வேண்டியது அத்தியவசியமாகும்.

பேரினவாதம் பேசி எமது உரிமைகளைத் தர மறுக்கும் தென்பகுதி ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும். இது தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கைகளிலும்தான் தங்கியுள்ளது.

பேச்சு முடிவடைந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்வதற்கு தமிழ் கட்சிகளும் கூட ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் இன்றைய காலகட்டத்தில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

எம் கட்சியில் உள்ளவர்களும் கூட சிறுசிறு பிரச்சினைகளை வைத்துக் கொண்டு முரண்பட்டுக் கொள்ளக்கூடாது. அவைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒற்றுமையாக எம் இனத்தின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் உழைக்க வேண்டும் - என்றார். (ஒ-86)

# காரைநகர் ~ ஊர்காவற்றுறை பாதை சேவை வீதி அதிகார சபையிடம்!

## விரைவில் ஒப்படைக்கப்படும்

ஊர்காவற்றுறை,ஒக்.6

காரைநகரிற்கும் - ஊர்காவற்றுறைக்கும் இடையே கடற்படையினரால் தற்பொழுது நடத்தப்பட்டுவரும் இயந்திரப் பாதை சேவையை விரைவில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாதையை பொறுப்பேற்றவுடன் அதற்கான வெளி இணைப்பு இயந்திரம் பெறப்பட்டு பாதை சேவை தங்களால் நடத்தப்படும் எனவும் வீதி அபிவிருத்தி சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது மேற்படி பாதை சேவை கடற்படையினரால் இலவசமாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ம-16)

# கல்வி மேம்பாட்டுப் பேரவையின் எழுத்துத்திறன் போட்டியில் பிறமாவட்டங்களில் தேர்வானோர்

யாழ்ப்பாணம்,ஒக்.6

உலக ஆசிரியர் தினத்தையொட்டி வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கிடையிலான தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய எழுத்துத் திறன் தேர்வின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முடிவுகள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன. ஏனைய மாவட்டங்களின் முடிவுகள் வலய ரீதியாக வருமாறு:-

### கிளிநொச்சி

சி.விசுவாசம்(பூநகரி ம.வி.), திருமதி இ.அருணாச்சலம்(கிளிநொச்சி இந்துக் கல்லூரி), திருமதி செல்வநாயகி இராஜரட்ணம்(தருமபுரம் ம.வி).

### முல்லைத்தீவு

திருமதி கூ.ஜெயராசா(அளம்பில் றோ.க.வித்தியாலயம்), செல்வி த.பேரிசுசி(முல்லைத்தீவு ம.வி), திருமதி கு.சிவசுந்தரம்(புதுக்குடியிருப்பு ம.வி.).

### துணுக்காய்

து.ஜெயதேவன்(தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை), இ.இன்பதாஸ் (பாலிநகர் ம.வி.), திருமதி கதனமூர்த்தி(துணுக்காய் அ.த.க.பாடசாலை).

### மன்னார்

ப.பிறெஜினா சந்தியோகுவேல் (தலைமன்னார் அ.த.க.பாடசாலை), து.ராமதாஸ்(சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இ.செபஸ்ரியன்(உயிலங்குளம் றோ.க.த.பாடசாலை).

### திருகோணமலை

எஸ்.யோகானந்தம்(ஸ்ரீசண்முகா இந்து மத்திய கல்லூரி), சி.செல்வராசா(இ.கி.ச.கோணேஸ்வர இந்துக் கல்லூரி), செல்வி க.சந்திரகுமாரி (புனித- மரியாள் கல்லூரி).

### மூதூர்

பூ.பழனிவேல்(சேனையூர் மத்திய கல்லூரி), வை.கமலநாதன்(கிளிவெட்டி ம.வி.), சி.இரத்தினசிங்கம்(கலைமகள் இந்துக் கல்லூரி).

### வவுனியா தெற்கு

திருமதி ச.இந்திரன்(வவுனியா இந்துக் கல்லூரி), தி.நிர்மலிங்கம் (பெரிய கோமரசன்குளம் பாடசாலை), ஜனாப் அசனார் பூ.அனும்மா(மதீனா முஸ்லிம் ம.வி.).

### வவுனியா வடக்கு

ஜெ.செந்தில்நாதன்(கனகராயன் குளம் ம.வி), செல்வி சி.சுந்தராம்பாள்(கிபாச்சூரி, கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலை), க.துவிணவன் (புதுக்குளம் ம.வி).

### மடு

செ.ப.விமலதாஸ்(கருங்கண்டல் றோ.க.ம.வி.), அ.யூட்வாஸ்(கருங்கண்டல் றோ.க.ம.வி), செல்வி கி.ஜெயீலா (றோய்(தேவன்பட்டி றோ.க.த.பாடசாலை).

### அக்கரைப்பற்று

சி.விநாயகமூர்த்தி(தம்பிலுவில் ம.ம.வி.), நந்தவராசா(கோளாவில் விநாயகர் ம.வி.), திருமதி ஜெகதீஸ்வரி நாதன்(தம்பிலுவில் ம.ம.வி.).

### மட்டக்களப்பு

திருமதி ச.அம்பலவாணர்(காத்தான்குடி மீரா பாலிகா ம.வி.), வே.தட்சணாமூர்த்தி(புதுக்குடியிருப்பு த.ம.வி), செ.சிவானந்த தேவன்(புத்தூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

### பட்டிருப்பு

திருமதி சூ.விநாயகமூர்த்தி(குருமண் வெளி சிவசக்தி ம.வி), திருமதி ச.புவனேந்திரராஜா(மகிழுர் சரஸ்வதி ம.வி.), க.பிரபாகரன்(தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயம்).

### சம்மாந்துறை

கௌ.கணேஸ்வரன்(விபுலானந்த ம.வி), செல்வி கே.ஜெயமதி(வேப்பையடி கலைமகள் வித்தியாலயம்), செல்வி சு.கிருபலட்சுமி(நாவிதன் வெளி அண்ணாமலை ம.வி.).

### கல்முனை

திருமதி சி.நற்குணசிங்கம்(பெரிய நிலாவெளி விஸ்ணு ம.வி.), திருமதி ம.மெய்யழகன்(காமல் பாத்திமா கல்லூரி), அழகுராசா(உவெஸ்லி உயர்தரப் பாடசாலை).

### கல்குடா

செல்வி வானதி கிருஸ்ணபிள்ளை (செங்கலடி மத்திய கல்லூரி), ஜனாப் ஏ.எம்.ஏஹூப்தர்சியா(காவத்தை முனை அல் அமீன் வித்தியாலயம்), சு.ஜெயரஞ்சித்(கறுவாக்கேணி விக்னேஸ்வர வித்தியாலயம்).

(ஓ-3-5)

# வன்னி பெருநிலப் பரப்பில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஒக்.6

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையம் ஊடாக நடத்தும் சர்வதேச ஆசிரியர் தினவிழா நிகழ்வுகள் இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெறுகின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், வடமராட்சி கிழக்கு ஆகிய கல்வி வலயங்களில் இயங்கும் 740 முன்பள்ளிகளின் 950 முன்பள்ளி ஆசிரியர்கள் இந்த நிகழ்வுகளில் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள கல்வி வலயங்களில் வலயத்திற்கு ஐந்து என்ற ரீதியில் 25 சிறந்த முன்பள்ளிகளைத் தெரிவுசெய்து, அம்முன்பள்ளிகளை சிறப்பாக நடத்துவதில் பங்குகொண்ட அந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், பெற்றோர் சங்கத்தினர், நிர்வாகிகள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களின் முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி நகரப் பகுதியிலும் - மன்னார் பிரதேச நிகழ்வுகள் மன்னார் நகர மண்டபத்திலும் - வவுனியா பிரதேச நிகழ்வுகள் வவுனியா நகரத்திலும் - இடம்பெறவுள்ளன.

கௌரவிக்கப்படுபவர்கள் விழா மண்டபங்களுக்கு 'பான்ட்' வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்படுவர். அங்கு கௌரவிப்பு, பரிசில் வழங்கல், மதிய விருந்துபசாரம் ஆகியன இடம்பெறும். (ஒ-3)

## உதவிப் பொருள் வழங்கல்

வலி.தெற்கு,ஒக்.6

வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 430 குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் மூலம் உலர் உணவு அல்லாத வீட்டுப் பாவனைப் பொருள்கள் பல வழங்கப்பட்டுள்ளன.

வீட்டுத்தேவைகளுக்கு அவசியமான பாய்கள், வாளிகள், விளக்குகள் போன்ற பல பொருள்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து இவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஒ-152)

## கிராமிய வங்கி

**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்**

**கணக்குகளை உறுதிப்படுத்தலும் புனரமைப்புச் செய்தலும்**

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கக் கிராமிய வங்கியில் 1996ஆம் ஆண்டிற்கு முன் க/கு வைத்திருந்தவர்கள் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்தி 15.11.2002ஆம் திகதிக்கு முன்னர் கணக்குகளை மீளப்புனரமைப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொது முகாமையாளர். (சி-24095)



## பாராட்டி வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்



யா/அளவெட்டி
அருணாசலம் வித்தியாலய மாணவி
செல்வி

### குலச்சந்திரன் குளோரிகிஷாந்தி

அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2002இல் 124 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரையும் அவரை நெறிப்படுத்திய அதிபரையும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (9118)



## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
25 - 01 - 1934



இறைவன் அடியில்
16 - 10 - 2001

### அமரர் செல்லர் இரத்தினம்

திதி: 06.10.2002

*ஓர் ஆண்டு ஓடி வந்தது - ஐயா!*
*நீயோ கனவுலகில் கலந்தாயே - ஐயா!*
*உன் நினைவலைகள் எம்மை*
*தினமும் வாட்டுதே - ஐயா!*
*காலங்கள் ஓடினாலும் உன்தன்*
*நினைவுகள் மாறாதே - ஐயா!*
*ஐயா என்ற தலைவன்*
*இல்லாமல் கலங்குகின்றோம் - ஐயா!*
*ஐயா, ஐயா என்று இனி*
*யாரை அழைப்போம் - ஐயா?*

ஐயா உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஞானவைரவர் கோயிலடி,
இணுவில் மேற்கு, (9115)
தகவல்: இ.உதயகுமார் (மகன்)



## 29ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
05 - 04 - 1929



மறைவு
08 - 09 - 2002

அமரர்

### வயிரவப்பிள்ளை இராசதுரை

*("அங்களப்பாய்", இணுவில் கிழக்கு, இணுவில்)*

இமைப் பொழுதும் தவறாது
உழைப்பாலே உயர்ந்து
பின் தூங்கி முன்னெழுந்து
மனையாளின் கடமைசெய்து
கொஞ்சும் மழலை கேட்டு - தினம்
நெஞ்சத்தே மகிழ்ந்து
கழித்த காலமெல்லாம் - தெய்வமே
கணப்பொழுதில் மறந்தனையோ?

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

"அங்களப்பாய்",
இணுவில் கிழக்கு,
இணுவில். (9116)


## கோயில் குடியிருப்பில் குடியமர்ந்தோருக்கு

தென்மராட்சி,ஒக்.6

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் இதுவரை அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட உணவுப்பண்டம் அல்லாத பொருள்களை நிவாரண உதவியாகப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு நாளை திங்கட்கிழமை லங்கா சேவா மன்ற நிறுவனத்தினால் நிவாரண உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பொருள்களை பெற்றுக்கொள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள் பத்திரங்களை நாளை காலை 10 மணிக்கு முன்னர் தமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு இப்பகுதிக்கான கிராம அலுவலர் கேட்டுள்ளார். (ஒ-117)

## பட்டமளிப்பு அங்கிகள் வழங்குதல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவில நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 11ஆம் திகதிவரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக கல்விக் கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளதாகப் பதிவாளர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்காகப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டினைக் காண்பித்து குறிப்பிட்ட திகதிகளில் தமக்குரிய அங்கிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## உதவி வழங்க நடவடிக்கை

காரைநகர்,ஒக்.6

காரைநகரில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு நாளை திங்கட்கிழமை உணவுப்பொருள்கள் அல்லாத பொருள்களை பட்டினிக்கு எதிரான இயக்கம் வழங்கவுள்ளது.

வீட்டுப் பாவனைப் பொருள்கள் வதிவிடத்தை துப்பரவு செய்வதற்கான உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், விவசாய உபகரணங்கள் உட்பட பல பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-73)

## வீதியை செப்பனிட கோரிக்கை

சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள தாமோதரம் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வீதியில் அப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பல முக்கிய அலுவலகங்கள் காணப்படுகின்றமையால் மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இவ்வீதியை செப்பனிட்டுத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஒ-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்படி கற்கைநெறிக்குப் பதிவு செய்ய விரும்பும் தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### தேவையான தகைமைகள்:

01. பல்கலைக்கழக அனுமதித் தேவையைப் பூர்த்தி செய்த சகல மாணவர்களும் விண்ணப்பம் செய்யலாம்.
02. தேர்வு - நேர்முகப் பரீட்சைமூலம்
03. கற்கை நெறிக்குரிய கட்டணம்:

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா | 250.00 |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா | 7000.00 |
| பரீட்சைக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலகவைப்பு (மீளப் பெறக்கூடியது) | ரூபா | 500.00 |
| ஆய்வுகூட வைப்பு (மீளப்பெறக்கூடியது) | ரூபா | 500.00 |
| மொத்தம் | ரூபா | 9000.00 |

**கட்டணங்கள் முற்பணமாகச் செலுத்தல்வேண்டும்.**

விண்ணப்பப் படிவங்கள் உதவிப்பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து யாழ்.பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது மக்கள் வங்கியின் பல்கலைக்கழகக் கிளையில் ரூபா 50 செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம். தபால்மூலம பெறவிரும்புவோர் சுயமுகவரியிடப்பட்ட 9''x4'' அளவுடைய முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையுடன் யாழ்.பல்கலைக்கழக நிதியாளரின் பெயருக்கு வரையப்பட்ட ரூபா 50 பெறுமதியான காசுக்கட்டளையினை அனுப்புவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்கள், இணைப்பாளர்/கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30.10.2002 புதன் அன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

கற்கைநெறி எதிர்வரும் ஜனவரி 2003இல் தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்.** 2002.09.26 (சி-24096)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
10 - 08 - 1947



இறப்பு
17 - 09 - 2001

### இளையதம்பி இராசநாயகம்

அப்பா!
உம்மைக் காணத் துடிக்கும்
எமதறிவு மாயம்
பேசத் துடிக்கும் எம்
உள்ளம் மாயம் - என்றும்
காதில் ஒலிக்கும் உம்
பேச்சும் மாயம்
கல்லேயான கடவுளும் மாயம்
உயிரே மாயம்! உலகே மாயம்!!
என்றும் எம்மனதில் நிலையாய் நிற்கும்
நினது பாசம் ஒன்றேதான்....

- மனைவி, பிள்ளைகள்.

தச்சன்தோட்டம்,
அச்சுவேலி தெற்கு. (9121)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை**

2002ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 2002ஆம்ஆண்டில் நடைபெற்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

### புலமைப் பரிசில் பரீட்சை - 2002

1. ம.கஜிதாப் - 159
2. ஸ்ரீ.குகதர்ஷன் - 137
3. க.க.உஷாந்தன் - 136
4. சி.நிதர்சனன் - 125
5. உ.பிரமியா - 123
6. கு.வைஸ்ணவி - 123
7. கு.அகிலன் - 120

### தமிழ்த்திறன் போட்டி

| | | |
|---|---|---|
| 1. க.க.உஷாந்தன் | - தரம் 5 பேச்சு | வலயம் 2ஆம் இடம் |
| 2. இ.பிரமிலா | - தரம் 5 ஆக்கத்திறன் | வலயம் 2ஆம் இடம் |
| 3. பு.துசிதா | - தரம் 5 பாவோதல் | கோட்டம் 2ஆம் இடம் |

### ஆங்கில தினப் போட்டி

| | | |
|---|---|---|
| 1. செ.தர்மிகா | தரம் 3 உறுப்பெழுத்து | வலயம் 3ஆம் இடம் |
| 2. கு.பைரவி | தரம் 4 பாவோதல் | வலயம் 3ஆம் இடம் |
| 3. செ.தர்மிகா | தரம் 3 பாவோதல் | கோட்டம் 3ஆம் இடம் |
| 4. கு.பாமகள் | தரம் 4 பாவோதல் | கோட்டம் முதலாம் இடம் |
| 5. க.க.உஷாந்தன் | தரம் 5 பாவோதல் | கோட்டம் 3ஆம் இடம் |

### திருக்குறள் மனனம்

| | | |
|---|---|---|
| 1. க.க.உஷாந்தன் | தரம் 5 வலயம் | 3ஆம் இடம் |
| 2. ஸ்ரீ.கவிப்பிரியன் | தரம் 4 கோட்டம் | 2ஆம் இடம் |

*இவ்வெற்றிகளுக்கு எல்லாம் தோன்றாத்துணையுடன் நின்று அருள்பாலித்த மருதடி விநாயகரின் பாதமலர்களை வணங்குகின்றோம்.*

- பாடசாலைச் சமூகம்.

(9122)

# YOGI HOME SCIENCE ACADEMY

▲ அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும்
(Basic Make -up & Hair Dressing)

▲ புதிய பயிற்சி வகுப்புகள் 16.10.2002 புதனன்று ஆரம்பமாக உள்ளன. இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்களுடன், முக்கிய வைபவங்களுக்கான ஒப்பனை முறைகள், இந்திய, கண்டியன், குஜராத்தி மற்றும் மடிசார் போன்ற வித்தியாசமான சாறி கட்டும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். (15 வகுப்புகள் மட்டும்)

▲ ஏனைய மனையியல் வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

▲ யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் பெண்களுக்கான ஒப்பனை அலங்காரங்கள(Make -up Hair Style and Dressing) செய்யவிரும்புவோர் முன்கூட்டியே தொடர்புகொள்ளவும்.

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(9112)


# விவசாயிகளுக்கு கடன் உதவி

ஊர்காவற்றுறை,ஒக்.6

தீவுப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் ஹற்றன் நஷனல் வங்கியினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டவரும் விவசாயக் கடன்வசதிகளை பெறவிரும்பினால் வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் அதற்கான விண்ணப்பபபடிவங்களை பெற்று விண்ணப்பிக்கமுடியும் என மேற்படி நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அண்மையில் வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் வங்கி அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் பயிர்ச்செய்கை மற்றும் விவசாய உபகரணங்கள் கொள்வனவிற்கு வழங்கப்படும் கடன் வசதிகள பற்றியும் அவற்றிற்கு அறவிடப்படும் வட்டி வீதம், மீளச்செலுத்தும் நடைமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக தெரிவிக்கப்பட்டது.

(ம-16)

## வேலணையில் விதைநெல் பெறலாம்

ஊர்காவற்றுறை,ஒக்.6

வேலணை கமநலசேவைகள் நிலையத்தில் 2002 காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லுக்கு விண்ணப்பித்த விவசாயிகள் ஓரிருதினங்களில் அவற்றை பெற்றுக்கொள்ளமுடியும் என மேற்படி நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான எ-ரி 353 வகையைச் சேர்ந்த நெல் இனமே ஓரிரு தினங்களில் நிலையத்திற்கு எடுத்துவரப்படும் எனவும் அதனைத் தொடர்ந்து விவசாயிகள் அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தீவுப்பகுதியில் இவ்வருடம் பெருமளவு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இதனால், கடந்த வருடத்தைவிட இவ்வருடம் கூடுதலான அளவு ஹெக்ரெயரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-16)

## மக்கள் வங்கியின் பரிசளிப்பு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கை மக்கள் வங்கியின் 'ஜயஶ்ரீ' சீட்டிழுப்பில் பரிசு பெற்றவர்களுக்கான தங்க நாணயப் பரிசுகள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து வங்கிகளிலும் கணக்கு வைத்திருப்போரில் சீட்டுழுப்பின்மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந்த தங்க நாணயப் பரிசுகள் வழங்கப்பட்டன.

யாழ்.கன்னாதிட்டியில் அமைந்துள்ள மக்கள் வங்கித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற இப்பரிசு வழங்கும் நிகழ்வில் மக்கள் வங்கி கிளைகளின் முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு கிளைகளிலும் பரிசு பெற்றவர்களுக்கான தங்க நாணயங்களை அந்தந்தக் கிளைகளின் முகாமையாளர்கள் வழங்கினர்.

(ஒ-4)

## ச.ச. நிலைய மூலதன நன்கொடை

யாழ்ப்பாணம்,ஒக்.6

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு மூலதன நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

பிரதேச சபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் 76 சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொண்டு விண்ணப்பப் படிவங்கள் பெற்று உடன் நிரப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

கூட்டத்திற்கு வருகை தரும்போது 2003 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள், ரபர் முத்திரை, வங்கிப்புத்தகம் மற்றும் விவரங்களுடன் சமுகம் தருமாறு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செரமேஷ் கேட்டுள்ளார்.

(ஐ)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.6

அரசின் தனியார் மயப்படுத்தல் நடவடிக்கைகளை எதிர்த்து நாளை மறுதினம் 8ஆம் திகதி கொழும்பில ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு பொ.ஜ.முன்னணி ஏற்பாடு செய்துவருகிறது.

கொழும்பில் மின்சாரசபைத் தலைமையகத்துக்கு முன்னால் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச வங்கிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் போக்குவரத்துத் துறை என்பவற்றை தனியார் மயப்படுத்துவதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)


# முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை மாவட்டங்களில் DIALOG GSM தொலைபேசி இணைப்பை பெறுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள்

## THE PHONE SHOP

### யாழ்ப்பாண மாவட்டம்

THE PHONE SHOP
204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 077 -110111

THE PHONE SHOP
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 021-2223817

THE PHONE SHOP
கைலாசபிள்ளையார் கோயில்,
நல்லூர்.

THE PHONE SHOP
பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.
தொலைபேசி:- 077 -110525

THE PHONE SHOP
36, பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
தொலைபேசி:- 021-2263267

THE PHONE SHOP
ஆலடி சந்தி,
மானிப்பாய்.
தொலைபேசி:- 021-2223817

### திருகோணமலை மாவட்டம்

THE PHONE SHOP
83A, பிரதான வீதி,
திருகோணமலை.
தொலைபேசி:- 026-20321
077 - 743788.

THE PHONE SHOP
154, தபால் காரியாலய வீதி,
திருகோணமலை.
தொலைபேசி:-077 - 780669.

### மட்டக்களப்பு மாவட்டம்

THE PHONE SHOP
மட்டக்களப்பு
100A, பார் வீதி,
அரசடி சந்தி,
மட்டக்களப்பு.
தொலைபேசி:- 077 - 7140500

THE PHONE SHOP
14, பிரதான வீதி,
காத்தான்குடி - 06.
தொலைபேசி:- 077 - 7140520

THE PHONE SHOP
276/1, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி:- 065 - 26400

### அம்பாறை மாவட்டம்

THE PHONE SHOP
யாசீன் பில்டிங்,
பிரதான வீதி, கல்முனை.
தொலைபேசி:- 077 - 7140530

THE PHONE SHOP
63, பிரதான வீதி,
நிந்தவூர்.
தொலைபேசி:- 077 - 7140540

THE PHONE SHOP
ஜெஸ்மின் மென்சில்,
அம்பாறை வீதி,
சம்மாந்துறை.
தொலைபேசி:- 077-7140570

THE PHONE SHOP
கையூம் சொப்பிங் கொம்ப்ளெக்ஸ்
பிரதான வீதி,
அக்கரைப்பற்று.
தொலைபேசி:- 077 - 7140550

THE PHONE SHOP
ஆமினா பில்டிங்
பிரதான வீதி,
பொத்துவில்.
தொலைபேசி:- 077 - 7140560

THE PHONE SHOP
3,டி.எஸ்.சேனநாயக்கா வீதி,
அம்பாறை.
தொலைபேசி:- 063-24810

அங்கீகரிக்கப்படாத நிலையங்கள் அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொலைபேசி இணைப்புக்களுக்கு DIALOG GSM பொறுப்பாக இருக்கமுடியாது.

அங்கீகரிக்கப்படாத இந்த இணைப்புகள் துண்டிக்கப்படலாம்.

அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் விற்கப்படும் கைத்தொலைபேசிகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதி உயர் தயாரிப்புகளாகும். அவற்றிற்கு உத்தரவாதமும் உண்டு.

Dialog GSM

(C/2403)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony 21", 29" T.V.விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.S.மகேஸ்வரன், (R.D.S., பழை சேவிஸ் ரேசன் முன்பாக) K.K.S.வீதி, மல்லாகம். (9017)

நல்ல நிலையிலுள்ள GA இலக்கத்தை உடைய CD50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு.தனிநாயகம் (ரஞ்சன்), அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு. T.P.: 077-733396 (9027)

நல்ல நிலையில் உள்ள R.A. விஸ்ரர் (16HP England) கிறைண்டர், அல்லர், பொலிஸர் என்பன விற்பனைக்குள்ளது. தொடர்பு: S.சிவதீபன் சரசாலை வடக்கு வாசிகசாலை வீதி, சரசாலை (8917)

சகல ஆவணங்களுடனும் மொறிஸமைனர் கார் திருத்தியமைகப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு அ.பரஞ்சோதி, இல.48, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் T.P 021-2223332 (9021)

பல இனங்களில் குருவிகள், பல வர்ணங்களில் மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (8384)

நல்ல இன Dashound நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராமநாதபிள்ளை R.C.பாடசாலை அருகில் (முதலியார் வளவு, அளவெட்டி வடக்கு. (9016)

நல்ல நிலையில் உள்ள M.D.90 Lancer 90 (Batch modal) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.38, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (9111)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8937)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் வற்பனைக்கு உண்டு. (1 Kg - 150/-, சுத்தம் செய்தல் இலவசம்). தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் அலலது மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (9019)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் வற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம்செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ப.சுதா, கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (9075)

புறொயிலர் இறைச்சிக்கோழி வற்பனைக்கு உண்டு. விலை 130/-. (சுத்தம்செய்த இறைச்சி 200/-) தொடர்பு: S.சிவகுமார், 19, புலவனார் வீதி, (கலவியங்காடு சந்தைக்கு அருகில்) தினமும் பெற்றுக்கொள்ளலாம். (9069)

புறொயிலர், சேவல் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் 1Kg 135/-. தொடர்பு:- சிவா, பருத்தித்துறை வீதி, (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (9076)

## கலர் மீன் விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், Air Pump, மீன் வளர்ப்புக்குரிய உபகரணங்கள், மீன் தீனகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நலலூர். (9066)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சங்கரத்தையில் பத்திரகாளி கோயிலுக்கும் துணவிச் சந்திக்குமிடையில் 31/2 பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு விற்பனக்கு உண்டு. தொடர்பு: T.P.No.: 2222216 (யாழ்ப்பாணம்). (9054)

யாழ்ப்பாணம் இல.48, 2ஆம் குறுக்குத்தெருவில் (பாங்ஷால் வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடையில்)5 அறைகளுடனான மாடிவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.இராஜபாலன், புதுமை மாதா கோயில், கிழக்கு வீதி, குருநகர். (சனி, ஞாயிறில் திரு.K.R. தவேந்திரன், 460, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2222444.)(9058)

கச்சேரி நல்லூர் வீதியில் 31/2 பரப்புக்காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும், மேலதிக 21/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.தருமலிங்கம், 344, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (9059)

உரும்பிராய் தெற்கு, ஞானவைரவர் கோயிலுக்கு அண்மையில் சேமன்புலம் வீதியில் 6 பரப்புக் காணி சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.சத்தியகுமாரன், மே/பா. றோய் தபாற் கந்தோர் லேன், உரும்பிராய் அல்லது 28, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (9096)

கண்டிவீதியை முகப்பாகவும் Y.M.C.A க்கு அண்மையில் ஆறு அறைகளுடன் கூடிய வசதியான மாடிவீடு (41/2 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.குகராஜன் தொலைபேசி எண் 2222490 (9010)

## தவறிவிட்டது

தெல்லிப்பழை மடத்தடி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சுஜிதா குணபாலசிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 807984853V), விசேட அடையாள அட்டை (இல. 0907024243), அம்மன் கோயிலடி கோப்பாய் வடக்கு, கோப்பாயை சேர்ந்த சின்னத்துரை கணேசலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குமார் கொமினி கேசன் பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (9103)

## வகுப்பு

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்க, பயில மற்றும் கடிதம், இலக்கணம், வினா-விடை வகுப்புகள். தொடர்பு:- ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9034)

## ஆங்கிலக் கல்வி

ஆங்கில ஆசிரியரினால் க.பொ.த (சா/த) டிசம்பர் 2002 ஆங்கில மீட்டல் வகுப்புகள் (Past Question and model Papers) நடைபெறுகின்றன. புது இலக்கம் 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (9107)

## திருமண சேவை

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இருபாலாரது குறிப்புக்கள் முழு விவரங்களுடன் உண்டு. திருப்தியான, துரிதமான சேவை. தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (9063)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கெமரா வகைகள் எலக்ரோனிக் பிளாஸ்கன், பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதல் முதலியன திருத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்திக்கருகில் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (9085)

## சாரமரத்திலிருந்து தவறிவீழ்ந்து இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.6

கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞா ஒருவா் சாரமரத்திலிருந்து தவறிவழ்ந்து படுகாயமடைந்தார்.

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கெங்காதரன் றொஸாந்தன்(வயது18) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். அவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## இருவர் மீது விசாரணை

வடமராட்சி,ஒக்.6

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்லும் வீதியை திறக்குமாறு கோரிக் கடந்த மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின்போது இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து பருத்தித்துறையைச் சேர்ந்த இருவர் கடந்த புதன்கிழமை பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே சிலர் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-173)

## நல்லரசரனே நீடு வாழ்க



தென்மராட்சிக் கல்விப்புலமதிலே
ஆசானாய், அதிபராய், கல்வி
அதிகாரியாய், பாங்குடனே பணி
பலவாற்றியே தனக்கென தனியிடம்
வகுத்திட்ட

உயர்திரு.
**இலங்கையர் கணேசன்**

*(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)*

தன்நீண்ட, அளப்பரிய கல்விச் சேவையிலிருந்து 07.09.2002 அன்று இளைப்பாறிய இந்த உயர் சேவையாளனை உலக ஆசிரியர் தினமதிலே வளமோடு நீடுவாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
யா/மிருசுவில் றோ.க.த.க.வித்தியாலயம்,
யா/எழுது மட்டுவாழ் அ.த.க.வித்தியாலயம்,
யா/கரம்பகம் அ.த.க.வித்தியாலயம்.

(9097)

## தேவை

மாதம் 20,000/- மேல்
வருமானம் பெற ஆர்வம்
உண்டா?
தொடர்புகொள்ளவும்.
071-274306.

(C/24092)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மிருசுவில்
றோ.க.த.க.பாடசாலை மாணவன்
**செல்வன் தவத்தரசர் தவநீறஜன்**

அவர்கள் 5ஆம் தர புலமைப்பரிசில்பரீட்சை- 2002இல் 150 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன்அவருக்குக் கல்வி கற்பித்தவர்களான யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் யா/கரவெட்டி திருஇருதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் பிரத்தியேகமான முறையில் கல்வி கற்பித்த திரு.மகாலிங்கசிவம் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மிருசுவில் தெற்கு,
மிருசுவில்.

- அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், நண்பர்கள்.

(9110)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

06 - 10 - 2002



HAPPY BIRTHDAY

**செல்வன் அ. சார்ருஸ்**

குருநகரைச் சேர்ந்த
திரு.திருமதி மாட்டின் அன்ரனி *(கோமஸ்)* - வசந்தம்
தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன் அ.சார்ருஸ்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.10.2002) சுவிஸ்லாந்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்ப, அம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உறவினர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றனர்.

*8/8, மத்திய கிழக்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*
தகவல்: ம.கியுமன்.

அன்பு அப்பா, அம்மா,
உறவினர்கள்.

(C/24089)

## விற்பனையில் முன்னணி வகிக்கும்!

விவசாயிகளின் தோழன்
'குட்வில்' உழவு இயந்திரங்கள்.

தற்போது
யாழ்ப்பாணத்தில்

12 HP 189,000/=
15 HP 204,000/=



நவீன தொழில்நுட்பம்,
வேகமான ஆக்கத்திறன்
சர்வதேச விருதுபெற்ற
உழவு இயந்திரங்கள்.
3 வகைகளைக் கொண்டது.
சகலவிதமான விவசாய
உபகரணங்களில் நெல் தூற்றுதல்,
தரையைப் பண்படுத்தல்
உரமிடுதல், தண்ணீர் இறைத்தல்
அரிசியாக்குதல் வியாபார நோக்கங்களுக்காக
எடுத்துச் செல்லல்
இவ்வாறான பல காரியங்களையும்
தன்னகத்தே கொண்டது.

2 வருட உத்தரவாதம்
5 இலவச சேவைகள்

GUDWIL

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

குட்வில் காட்சியறை
55, துட்டுகைமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.

தொலை : 818415, 074 208101/2, 077 312662
தொலை நகல் : 818416, 074 208102

eLORA

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 . 03 . 1950

உதிர்வு 06 . 09 . 2002

அமரர்

## அந்தோனிப்பிள்ளை தேவதாசன்

(தங்கத்துரை)

எமது கழகத்தின் முத்த உறுப்பினர்களாகிய அ. அலக்ஸ் சாண்டர் (BLACK BELT 3rd DAN), அ.ஸ்ரெனிஸ்லாஸ் (BLACK BELT 3rd DAN) அவர்களின் பாசமிகு சகோதரன் அந்தோனிப் பிள்ளை தேவதாசன் (தங்கத்துரை) அவர்களின் திடீர் மறை வினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS, JAFFNA.

(C-24098)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பளையில் ரூ.15 ஆயிரம் கொடுப்பனவு

பளைப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு விரைவில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா 15 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

பளை பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட மீளக் குடியமர்ந்தோரின் பட்டியலின் பிரகாரம் மக்கள் குடியமர்ந்துள்ளதை உறுதிப்படுத்துவதற்காக கிளிநொச்சி செயலக புனர்வாழ்வு பிரிவினர் கடந்த மூன்று தினங்களாக நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

தற்காலிக கொட்டகை அமைத்ததற்கு ரூபா 7ஆயிரமும், தொழில்கள் ஆரம்பிக்க ரூபா 5ஆயிரமும், மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா 2 ஆயிரமும், வீட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய ரூபா ஆயிரமுமாக ரூபா 15ஆயிரம் குடும்பமொன்றுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## யூனியன்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது. மின்சாரம் வழங்க வசதியாக பாடசாலை வளவினூடாக மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றபோதிலும் கூட,அதனைப் பெற முடியாத நிலை இருப்பது கவலைக்குரியதாகும். இது தொடர்பாக அமைச்சர் மூலம் நாம் எடுத்த முயற்சிகளும் இதுவரை பலனளிக்க வில்லை.

★ நாளாந்தம் தெல்லிப்பழை தடைமுகாமைத் தாண்டி ஆயிரக் கணக்கில் பல்லினத்தைச் சேர்ந்த சுற்றுலா வருபவர்கள் மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை போன்ற அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் உட்பகுதிகளுக்கு ஆனந்தமாகச் சென்று வருகின்றனர். ஆனால், தெல்லிப்பழை தடைமுகாமிலிருந்து 100 மீற்றர் தொலைவிலுள்ள எமது பாடசாலைக்கு பாடசாலையின் வளர்ச்சி கருதி பாடசாலை சமூகத்தினர் சென்றுவர தடைவிதிப்பதையிட்டு ஆச்சரியமும் விசனமும் அடைகின்றோம். இதற்கான காரணம் தெரியாது தடுமாறுகின்றோம்.

எனவே எமது பாடசாலையின் மேற்படி பரிதாப நிலையைக் கண்டு பெற்றோராகிய நாமும், பிள்ளைகளும், பழைய மாணவர்களும் இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு எம்மாலான சாத்வீக வழியிலான முன்னெடுப்புகளை தொடர்ந்து செய்வதுபற்றி சிந்திக்க வேண்டியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-86)

## அறிவித்தல்

கே. கே. எஸ். றோட், இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் சிவசம்பு சிவனேசன் என்பவரது சலவைத் தொழிலகம் 12. 09. 2002இல் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே தங்களின் உடுப்புகளை ஸ்ரேசன் றோட், கோண்டாவில் என்ற விலாசத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:
சிவசம்பு சிவனேசன்

(9131)

## யா/யூனியன் கல்லூரி

### ஆசிரியர் தினம் நடைபெறமாட்டாது

நாளை (7.10.2002) திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஆசிரியர் தினவிழா இதுவரை படையினரின் அனுமதி கிடைக்காத காரணத்தால் நடைபெறமாட்டாது என்பதை வேதனையுடன் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம். (9130)

செயலாளர்
பழையமாணவர் சங்கம்.

# இதய அஞ்சலி

எமது பாடசாலை சக ஊழியர்

## திரு.நடராசா உதயகுமார்

அவர்கள் மரணமானது கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/அருணோதயக் கல்லூரி,
*அளவெட்டி.* (9119)

- பாடசாலை சமூகம்.


ராஜா யாழ்ப்பாணம்.
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
கடல்பூக்கள்
10.30, 2.30, 6.30

நாகம்ஸ் சுன்னாகம்
M.G.R, ராதாசலூஜா நம்பியார் நடித்த
இதயக்கனி
காட்சிகள்: 11.00, 3.00, 6.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந் (இருவேடம்), மீனா, பிரபுதேவா நடித்த
வானத்தைப்போல
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)


# நன்றி கூறுகின்றோம்

நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியர்

## அமரர் ஏகாம்பரநாதன் உமாகாந்தன்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின்போது உதவிய அயலவர்கள், நண்பர்கள், குருமார், துறவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழகத்தினர், சித்தமருத்துவத்துறையினர், வைத்தியசாலை ஊழியர்கள், வீட்டுப்பணியாளர்கள் மற்றும் மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், இரங்கலுரை ஆற்றியோர், ஆகாரம் தந்தவர்கள் மற்றும் இரத்ததானம் உதவிய படையினர், இறுதிக்கிரியையிலும், அந்தியேட்டி ஆகியவற்றின் போது வருகைதந்த படையினர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*முறிவுநெரிவு வைத்தியசாலை,*
*நாயன்மார்கட்டு.* (9124)

- மனைவி, மக்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 . 03 . 1950

உதிர்வு 06 . 09 . 2002

அமரர்

## அந்தோனிப்பிள்ளை தேவதாசன்

(தங்கத்துரை)

A.O.M.A. கழக உறுப்பினர்களும் எமது நண்பர்களுமாகிய அ. அலக்ஸ்சாண்டர், அ.ஸ்ரெனிஸ்லாஸ் ஆகியோரது அன்புச் சகோதரன் அ.தேவதாசன் அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரோடு எமது ஆழ்ந்த துயரினை வெளிப்படுத்துவதுடன் இன்றைய 31ஆவது நினைவுநாளில் அவர்களது தன்னலமற்ற சேவையினையும் நினைவுகூருகின்றோம்.

போஸ்கோ
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-24098)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24 . 11 . 1932

உதிர்வு 06 . 10 . 1992

அமரர்

## K.L.வில்லியம்

(முன்னாள் உரிமையாளர், யாழ். டியூக், நியூசிற்றி பேக்கரி)

தென் ஈழத்தில் பிறந்து, வட ஈழத்தில் வாழ்ந்து மறைந்த தங்களது சேவைகள் பத்தாண்டுகள் என்ன, பலநூறு வருடங்கள் சென்றாலும் மறக்க முடியாதவை. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (07.10.2002) திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு யாழ். புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தந்தையின் வழியில் தொடரும் தனயன்களின் வர்த்தக நிறுவனங்கள்:*

| | | |
|---|---|---|
| யாழ்நகரில்: 43 வருட கால சேவையில் **வில்லியம் பேக் ஹவுஸ்** 583, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். உரிமை: **வி.சொலமன் (றூபன்)** | தமிழகத்தில்: **சாம்சன் பேக்கரி** **வில்லியம்ஸ் குரூப்** 901, 64ஆவது தெரு, 10ஆவது செக்டர், கே. கே. நகர், சென்னை. உரிமை: **வி.அனுறன்** | பிரான்சில்: **வில்லியம் பேக் ஹவுஸ்** 20, AVENUE CARNOT 93360-NEULLY PLANCE, FRANCE. உரிமை: **வி.நிமல்** (9125) |

# மரண அறிவித்தல்கள்

## அன்ரனி கஷ்மீர் யோசவ்

(இளைப்பாறிய சிறுகைத்தொழில் ஆசிரியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற மரியம்மா அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவர் அன்ரனி கஷ்மீர் யோசவ் அவர்கள் நேற்று (05.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெனடிக்ற் மேரியேசேப்பின் (புஸ்பம்),
யோசவ் அன்ரன் றோய் (ராஜன்).
(மக்கள்)

*115,சென்.பற்றிக்ஸ் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(9129)

## வில்லியம் யேக்கப் கிறிஸ்ரி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட வில்லியம் யேக்கப் கிறிஸ்ரி அவர்கள் நேற்று (05.10.2002) சனிக்கிழமை மட்டக்களப்பு 'பரிபூரணம்' இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பிரான்சிஸ்பிள்ளை யோசேப் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விக்ரர் இம்மானுவேல் மற்றும் மேரி திரேசா, யூஜின் றெஜிஸ், றெஜினா ஸ்ரெல்லா, ரஞ்சனி, நெல்சி, பிரான்சிஸ் ஜெறி, றோகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற டேவிற் வஸ்தியாம்பிள்ளை மற்றும் செல்வநாயகம், அல்பிரட், யேசுரெத்தினம், அருள்நேசன், கமலா, பகவதி, ஷிறானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராஜா, பாலா, குமார், சுஜீவன், சஜீவன், சஞ்சீவன், ஜீவா, புஸ்பா, செல்வி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சர்மிலி, தர்மிலி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் சுரேஸ், ரொமேஸ், குணேஸ், சுரேந்தினி, சுமுதினி, அருட்தந்தை யோ.சணிஸ்ரன், பபா, சூட்டி, சுஜோ, சுபோ, சாந்தன், பிரபா, பிரியா, சுசானா, பெபியன், றொசான், டிஷான் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் "பரிபூரணம்" இல.8, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பில் நாளை (07.10.2002) திங்கட்கிழமை காலை 10மணியளவில் இரங்கல் திருப்பலியின் பின்னர் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அருட்தந்தை செ.யோ.சணிஸ்ரன்
(புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

(9132)

# வளலாய் தோட்டக் காணிகளில் படையினர் துப்புரவுப் பணி!

## மக்கள் திரண்டு ஆட்சேபம்

அச்சுவேலி,ஒக்.6

வளலாய், பத்தமேனி பகுதிகளில் தோட்டநிலங்களையும், காணிகளையும் படையினர் புல்டோசர் கொண்டு துப்புரவு செய்வதை அப்பிரதேச மக்கள் ஆட்சேபித்திருக்கின்றனர்.

நேற்று அங்கு கூடிய மக்கள் படையினரின் இந்தச் செயலைத் தடுத்து நிறுத்த முயன்றுள்ளனர். படையினரின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கினார் என்று கூறப்படும் அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டார்.

பலாலி விமான நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாக உள்ள முன்னணிக் காவலரண்களுக்கு அப்பால் - 600 மீற்றர் தூரம் வரையுள்ள - விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை புல்டோசர் மூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் படையினர் கடந்த இரு தினங்களாக ஈடுபட்டிருக்கின்றனர்.

வசாவிளான், வளலாய், பத்தமேனி மற்றும் கதிரிப்பாய் வரையிலான மக்கள் குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கை நிலங்களில் புல்டோசர் மூலமான துப்புரவுப் பணிகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

செம்பாட்டுப் பகுதியில் நேற்று ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான மக்கள், அங்கு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரின் புல்டோசருக்கு குறுக்கே அமர்ந்து அதனை நகர விடாது தடுத்து நிறுத்தினர். அப்போது அங்கு சென்ற ஈ.பி.டி.பி. கட்சியின் உள்ளூர் பிரமுகர் ஒருவர் "படையினர் புதிய எல்லைகளை இடமாட்டார்கள். கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகள் இப்பகுதிகளில் உள்ளனவா என்பது குறித்தே ஆராய்கிறார்கள். இது உங்களின் நன்மைக்காகவே" என்று பொதுமக்களிடம் கூறினார். அதனைத் தொடர்ந்து அந்த உறுப்பினருக்கும், பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது. பொது மக்களால் தாக்கப்பட்ட கட்சி உறுப்பினர் தனது மோட்டார் சைக்கிளில் ஏறி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இப்பிரதேசத்தை துப்புரவாக்கி அங்கு புதிய எல்லைகளை அமைப்பதன் மூலம் குடியிருப்புப் பகுதிகளைப் படையினர் ஆக்கிரமிக்க முயல்வதாக பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் யுத்தநிறுத்த மீறல் சம்பவம் என விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

(ஐ-11-178)


HOTEL SEIVAMS

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ்

1. தனியறை (Single Room)
2. இருவர் அறை (Double Room)

மிகவும் சகாயமான கட்டணங்களில் வாடகைக்குக் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

HOTEL SEIVAMS
Guest House,
53, Vivekananda Hill Colombo - 13
தொலைபேசி: 326522
021 - 2508 யாழ்ப்பாணம். (9071)



முக்கிய அறிவித்தல்

இன்று இடம்பெறும் சேவையில் 15ஆசனங்கள் உள்ளன. முதல் வருபவர்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஆசனங்கள் வழங்கப்படும். பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று பிற்பகல் 2.30மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு வரவும்.

கட்டணம் 1999/= மட்டுமே

லயன் ஏயர்,
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-24100)



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!

10 மாதகாலத்தினுள் ஆங்கிலத்தைப் பிறர் உதவியின்றி வாசித்துப் புரிந்துகொள்ளவும் சுயமாக இலக்கணப் பிழையின்றி கருத்துள்ள வசனங்களை அமைக்கவும் பயிற்றுவிக்க நாங்கள் தயார் நீங்கள்???


ஆரம்பம்: 06.10.2002 (9a.m.)

By: K.T.Rajah
T.P.: 021-2222588 (Home)
077-174512 (Hand Phone)

ENGLISH ACADEMY
இல.210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(8893) பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூ.1,500/= மட்டும்.





கம்பன் எழுத்தோலை
வெளியீடு 3.02
விண்டோஸ் 95, 98, 2000 & என்.ரி.

11 தமிழ் அச்சுக்கள் (TAM-TAB), தமிழ் பட்டியல்கள் தமிழ் உதவி
மின் அஞ்சல் வசதி. 280 இந்திய கலாசார சித்திரங்கள்.
திரையில் தோன்றும் விசைப்பலகை.
தமிழ் 99 & தட்டச்சு விசைப் பலகைகள். தமிழ்/ஆங்கில பிழை திருத்தி.
வலைத்தளம் செய்யும் வசதி (HTML). நிருக்குறள், கலசம், திருப்பாவை....

வகுப்புக்கள்:
பிரிவு I 12.10.02
பிரிவு II 14.10.02
ஆரம்பம்.

கற்கைநெறிக்கான கட்டணம் 1500/=மட்டுமே.

கம்பன் மென்பொருள் வழங்கும் ஆஸ்திரேலிய சான்றிதழ்

(C-24012)

D-Solve in IBMS
701, K.K.S. Road, Jaffna. (Near Jaffna Hindu College)


## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் -

இன்று அவரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் கையளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும்-

ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து நெடுந்தீவுப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. நேற்றிரவு சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற பொலீஸார் விசாரணைகளை நடத்தினர்.(ஐ-3)

## பலாலித் தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இயல்பு நிலை தோன்ற முடியாது. யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறிக்கொண்டு இராணுவம் தொடர்ந்தும் அவற்றில் தங்கியிருப்பதை பொதுமக்களின் பிரதிநிதிகளாகிய நாம் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இதனை முற்றாக வெறுக்கின்றார்கள். தமது சொந்த இருப்பிடங்களில் நிம்மதியாக வாழவே அவர்கள் விரும்புகிறார்கள். எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து - யாழ்.குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றவேண்டும். அவ்வாறு அவற்றை அகற்றத் தவறும் பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் எமது மக்களுடன் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கவேண்டி ஏற்படும். இது விடயத்தில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

எமது இந்த நிலைப்பாட்டை பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு உடன் தெரியப்படுத்தவுள்ளோம்.

மேற்கண்டவாறு கோரும் பிரேரணையை இந்து விவகார அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் நேற்றைய கூட்டத்தில் முன்வைத்தார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டனர்.

★ ஏ-9 கண்டிவீதியை 24மணி நேரமும் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறந்து விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பது-

★ தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான கொடுப்பனவுகளை முழுமையாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது-

★ வீதிகளில் இராணுவம் பயன்படுத்தாத காவலரண்களை உடனடியாக அகற்றி போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது -

ஆகிய தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் யாழ்.மேலதிக அரச அதிபர் துவைத்திலிங்கம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம், கிளிநொச்சி அரச அதிபர் ரி.இராஜநாயகம், தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ஐ-8)


BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2004
THERMO CHEMISTRY
வெப்ப இரசாயனம்
By: BAVAN (B.Sc.)
ஆரம்பம்: 07.10.2002 Mon. 3.00p.m.


## பன்னிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பொது ஈகச்சுடரை ஏற்றினார். கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பாரதி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து கொடி வணக்கம், அகவணக்கம் ஆகியன இடம்பெற்றன.

12 வேங்கைகளின் நினைவுத் தூபியில் வைக்கப்பட்ட உருவப்படங்களுக்கு போராளிகளும் பொதுமக்களும் ஈகச்சுடர் ஏற்றினர்.

உருவப்படங்களுக்கு யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பன்னிரு வேங்கைகளின் நினைவாக புகைக் கூண்டுகள் வானத்தில் பறக்கவிடப்பட்டன.

இதன்பின்னர் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் அரங்க நிகழ்வுகள் பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் ந.சிவஞானசுந்தரம் தலைமையில் ஆரம்பமாகியது.

யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி, வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொ.சிவனேசன், வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.சூரியகுமார் உட்பட பலர் உரையாற்றினர் (ஐ-5-10-173)

## வடபகுதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறேன்.

ஆளுநர் பதவியிலிருந்து அவரை நீக்கவேண்டும் என்றும் கோருகிறேன்.

இதேபோன்று இங்குள்ள சில அதிகாரிகளும் தமது கடமைகளை ஏனோதானோவென்று வேண்டா வெறுப்பாகவே செய்து வருகிறார்கள். அதற்காக நான் எல்லா அதிகாரிகளையும் குறைகூறவில்லை. கடந்த கால போர்ச்சூழலிலும் சரி இப்பொழுதும் சரி குறைந்த வளங்களுடனும் பல பிரச்சினைகளின் மத்தியிலும் நேர்மையுடன் - அர்ப்பணிப்புடன் - பலர் பணியாற்றி வருவதை நான் அறிவேன்.

ஆனால் பிராந்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளரைப் போன்ற அதிகாரிகள் சற்றும் கடமை உணர்வு இல்லாதவர்கள். பொதுமக்களின் நிலை உணர்ந்து செயற்படாத இவர் இந்தப் பதவிக்கு லாயக்கற்றவர். இவரையும் உடனடியாகப் பதவியில் இருந்து நீக்க வேண்டும். இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பேசி நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஐ-8-10-173)

## வெகுஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரதம் மேற்கொண்ட செல்வராசா கஜேந்திரராசா என்பவர் மயக்கம் அடைந்தார். அவரை சிகிச்சைக்காக கீழே இறக்க ஒன்றரை மணி நேரம் எடுத்தது. கூரையில் இருப்பவர்கள் மயக்கமடைந்தால் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது கடினம் என்றும் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


இளமை மற்றும் அழகின் ரகசியம்



பயோட்டின்-H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்
Biotin-H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.எனவே Biotin-H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது
பயோட்டின்-H விஞ்ஞான சான்று பெற்றது. பக்க விளைவுகள் இல்லை.
ஏக விநியோகஸ்தர்கள்: ஜெகன் பார்மஸி, யாழ்ப்பாணம். (C-23915)
தொலைபேசி: இல:021 - 3194 சந்தைப் படுத்துவோர் ARKEMN:கொழும்பு



மீண்டும்
LIONAIR விமானசேவை
யாழ்ப்பாணம் — கொழும்பு
ஒருவழிக் கட்டணமாக
ரூபா 1999/=
பதிவுக் கட்டணம் ரூபா 100 மட்டும்
சாந்தி கபே
278, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021-222 3553
(8994)


## மரண அறிவித்தல்

### திருமதி ஞானம்மா நீக்கிலாப்பிள்ளை

*(இளைப்பாறிய ஆசிரியை, புனித சாள்ஸ் ம.வி.,யாழ்)*

திருமதி ஞானம்மா நீக்கிலாப்பிள்ளை அவர்கள் நேற்று (05.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ம.நீக்கிலாப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர் - புனித சாள்ஸ் ம.வி.,யாழ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற எலிசம்மா செபமாலையின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், சென்.யோசப் கல்லூரி திருகோணமலை) மற்றும் எட்வேட் (இளைப்பாறிய ஆசிரியர், சென்.அன்ரனிஸ் கல்லூரி, கண்டி), காலஞ்சென்ற செபமாலை ஆகியோரின் மைத்துனியும் அருமைநாயகம் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்), யோகநாயகம் (U.K), யசிந்தா கலிஸ்ரஸ் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்), பற்றிமா (S.C-U.K), பற்றீசியா கிளட்வின் (கனடா), பெனிற்றா கோணேஸ்வரன் (UNHCR) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறிற்றா, அருமைநாயகம் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்), பிறிசிலாகலா யோகநாயகம் (U.K), கலிஸ்ரஸ் யோசவ் (திரேசா தொலைத் தொடர்பகம்), கிளட்வின் (கனடா), கோணேஸ்வரன் (UNHCR) ஆகியோரின் அன்பு மாமியாரும் நவமணி ஆனந்தராசா காலஞ்சென்ற திரவியம் அமிர்தவாசகம் (இளைப்பாறிய ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி) மற்றும் பேரின்பநாதன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் ஜெரி பிரன்டன், காலஞ்சென்ற ஆன் சிந்துஜா மற்றும் ரைசன், ஷேளி, மைக்கல், நிக்கலா பாரண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*189, Vembady Rd,*
*Jaffna.* (9133)

தகவல்:
ம.நீக்கிலாப்பிள்ளை (கணவர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.